கமெண்ட் கந்தர்...





Follow us:

# தமிழன்

THAMILAN தமிලன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 165 சுபகிருது வருடம், தை மாதம் 25ஆம் திகதி புதன்கிழமை (08.02.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ரஜப் - 16, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


தேர்தல் செலவுக்கு முதற்கட்ட நிதியை தருமாறு தேர்தல் ஆணைக்குழு விடுத்த கோரிக்கைக்கு திறைசேரி இதுவரை எதுவித பதிலையும் வழங்காமல் இழுத்தடிப்பு செய்கிறதாம்.

அரச அச்சகம், பொலிஸ், தபால் திணைக்களங்களுக்கு ஆரம்பகட்ட நிதியை வழங்கியாகவேண்டும் தேர்தல் ஆணைக்குழு. ஆனால், கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியையே வழங்காமல் திறைசேரி அமைதிகாக்கும் மர்மம் என்ன? நிதியமைச்சர் ரணில் அல்லவா?




# துருக்கி உயிரிழப்புகள் 20 ஆயிரத்தை எட்டலாம்!







உலக சுகாதார ஸ்தாபனம் அச்சம் வெளியிட்டது

06, 07 பக்கங்கள்

# முடங்கும் அபாயம்!

## முக்கிய சேவைகள்

### ரணிலின் உரையை எதிர்த்து தொழிற்சங்கங்கள் இன்று கூட்டிணைவு

(கே. சுபானி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அக்கிராசன உரை பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ள நிலையில், அவருக்கும் அரசாங்கத்துக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அரச துறையினர் இன்று பாரிய போராட்டத்தில் ஈடுபடவுள்ளதால் அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் முடங்கும் அபாயம் உருவாகியுள்ளது.

அனைத்து அரச சேவைகளையும் முடக்கி சுமார் 10 ஆயிரம் அரச ஊழியர்களைத் திரட்டி கொழும்பில் இன்று பாரிய போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அனைத்து தொழிற் சங்கங்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, எரிபொருள் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளும் பாதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரச துறையினர் இன்று முன்னெடுக்கும் போராட்டத்துக்கு சிவில் அமைப்புகள், பிக்குகள், அரசியல் கட்சிகள் ஆகியனவும் ஆதரவை வெளியிட்டுள்ளன.

அரச வைத்தியசாலைகளில் இன்று காலை 08 மணிமுதல் 24 மணித்தியால வேலை நிறுத்தப் போராட்டம் இடம்பெறுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

மேலும், எரிபொருள் கூட்டுத்தாபனம், துறைமுக அதிகாரசபை, மின்சார சபை, நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆகிய அரச நிறுவனங்களின் ஊழியர்கள் கோட்டை ரயில் நிலையத்திலிருந்து பாராளுமன்றம் வரை பேரணியொன்றை நடத்துவதற்கும் ஏற்பாடுகள்...

02 பக்கம்

# வீதிகளைப் பயன்படுத்த புதிய வரி அறிமுகம்

### நிதியமொன்றை உருவாக்கவும் யோசனை

(நா. தினுஷா)

நாடு முழுவதிலும் இருக்கும் வீதிகளின் பராமரிப்புப் பணிகளுக்காக புதிய நிதியமொன்றை உருவாக்க யோசனை முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் அந்த நிதியத்தினூடாக வீதிகளை பயன்படுத்துபவர்களிடமிருந்து வரி அறவிட எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளரும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மேலும், இந்த நிதியம் தொடர்பான செயற்பாடுகள் தொடர்பில் நிதி அமைச்சுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

02 பக்கம்



நுவரெலியாவுக்கு வருகைதந்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், சீதாஎலிய சீதையம்மன் ஆலயத்தில் நேற்று (07) வழிபாடுகளை மேற்கொண்டார். ஆலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணனும் வழிபாடுகளின்போது கலந்துகொண்டிருந்தார். (படப்பிடிப்பு: எஸ். தியாகு)



# தேர்தலை காலந்தாழ்த்த அரசாங்கம் விரும்பவில்லை

### வருமானமின்மையே பிரச்சினையென அமைச்சர் பந்துல தெரிவிப்பு

(நா. தினுஷா)

அரசாங்கம் ஒருபோதும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலந்தாழ்த்தாது. இருந்தபோதும், வரவுக்கும் செலவுக்கும் இடையில் இருக்கும் இடைவெளியை நிரப்புவதே தற்போதுள்ள பிரதான பிரச்சினையாகும். ஆகவே, ...

02 பக்கம்

# 14 இலங்கையருக்கு துருக்கியில் பாதிப்பு

துருக்கியில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தில் இலங்கையர்கள் 14 பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மேலும் 13 பேர் பாதுகாப்பாக இருப்பதாகவும் ஒருவர் காணாமல்போயுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# சார்ள்ஸின் இராஜினாமா

### ஜனாதிபதியால் ஏற்பு

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸின் இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, சார்ள்ஸுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தல் விடுத்துள்ளார்.

# தேசிய சுதந்திர தின நிகழ்வுக்கு ஒரு கோடியே 11 இலட்ச ரூபா செலவு

### போலியான தகவல்களை மறுக்கிறது ஜனாதிபதி செயலகம்

இவ்வருடம் நடைபெற்ற 75ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுக்கு ஒரு கோடியே 11 இலட்சத்து 30 ஆயிரத்து 11 ரூபா செலவாகியதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி செயலகம், சுதந்திர தின உத்தியோகபூர்வ அரச நிகழ்வின் செலவுகள் தொடர்பில் சமூக ஊடகங்களில் வெளிவந்துள்ள பொய்யான செய்திகள் மற்றும் தகவல்கள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி அலுவலகம் நேற்று (07) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொருளாதார நெருக்கடி காரணமாக சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் அரச விழாவைப் புறக்கணிக்குமாறு மக்களை கட்டாயப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்ட...

02 பக்கம்

# முடியுமானால் மக்களுக்கு நிவாரணம் வழங்குவோம்

### கஷ்டங்களை அறிந்துவைத்துள்ளதாகக் கூறுகிறார் பந்துல

(நா. தினுஷா)

சர்வதேச உறவுகளின்றி நாட்டை முன்னெடுக்க முடியும் என்று யாராவது எண்ணுவார்களாக இருந்தால் அவர்களுக்கு மனநோய் ஏற்பட்டிருக்கவேண்டும். அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் தொடர்பில், அனுமானத்தின் அடிப்படையில் தீர்மானம் எடுக்க முடியாது. இருந்தபோதும், நாட்டு மக்களுக்கு ஏதாவது நிவாரணம் வழங்க முடியுமாக இருந்தால் அதனை நிச்சயமாக பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் தெளிவாக இருக்கிறது...

02 பக்கம்



வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய அரச எதிர்ப்புப் பேரணியின் நிறைவு நாளான நேற்று (07) வெருகல் ஸ்ரீ வேலாயுத சுவாமி ஆலய வளாகத்தில் சுடரேற்றி நினைவேந்தல் இடம்பெற்றது. (படப்பிடிப்பு: க. கிருபாகரன்)

# 55 வேலைத்திட்டங்களை இடைநிறுத்துகிறது அரசு

நாட்டில் நிலவும் கடும் நிதி நெருக்கடியின் காரணமாக, 55 அரச வேலைத்திட்டங்களை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எண்ணிக்கையிலான பணியாளர்களைக்கொண்ட வேலைத்திட்ட அலுவலகங்கள் மற்றும் வேலைத்திட்ட முகாமைத்துவ அலகுகளை மீளாய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், 32 வேலைத்திட்ட அலுவலகங்களை தற்காலிகமாக நிறுத்திவைக்க...

02 பக்கம்

# 13க்கு மேலதிகமான அதிகாரம் தமிழருக்கு

### பிக்குகள் உள்ளிட்ட சர்வமதத் தலைவர்கள் யாழில் வலியுறுத்து

(யாழ். செய்தியாளர்)

தமிழர்களுக்கு 13 ஆவது திருத்தத்திற்கு மேலதிகமாக அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என பௌத்த பிக்குகள் யாழ்ப்பாணத்தில் நேற்று (07) கூட்டாக அறிவித்தனர்.



02 பக்கம்

# பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் குறுகிய கால உத்தியே தனிநபர் வருமானத்தின் மீதான வரி



## தொழிற்சங்க தலைவர்கள் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் விளக்கம்

தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கான ஒரு குறுகிய கால உத்தியாகவே தனிநபர் வருமானம் அடிப்படையில் வரி விதிப்பு செய்யப்படுவதாகவும் இப்புதிய வரி விதிப்பு முறை ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த சதவீதமென்றும் நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கபில சேனாநாயக்க தெரிவித்தார்.

புதிய வரி அறவிடும் முறை தொடர்பில் தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளின் கருத்துகள் மற்றும் யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு, சில நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையிலான குறுகிய கால உத்திகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் சேனாநாயக்க தெரிவித்தார்.

புதிய வரிக் கொள்கை தொடர்பில் தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் பணிப்புரைக்கமைய, ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய மற்றும் நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கபில சேனாநாயக்க ஆகியோரின் தலைமையில் நேற்று முன்தினம் (06) நிதியமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய வருமான வரிக் கொள்கை தொடர்பில் அரச மற்றும் அரச இடையீட்டு நிறுவன ஊழியர்களுக்கிடையே சில பிரச்சினைகள் உருவாகியிருப்பதாகவும், அதன் காரணமாக அவர்கள் எதிர்நோக்கியுள்ள அசௌகரியங்களைக் கருத்திற் கொண்டே தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதாக சமன் ரத்னப்பிரிய சுட்டிக்காட்டினார்.

மேலும், தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் அவசியமான கருத்துகள் மற்றும் யோசனைகளைப் பெற்றுக்கொள்வதே இக்கலந்துரையாடலின் பிரதான நோக்கமென்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது, நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கபில சேனாநாயக்க அரச வருமானம் மற்றும் அரச செலவினங்கள் தொடர்பிலும் வருடாந்த வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை சமாளிக்க அரசு பின்பற்றும் நிதி உத்திகள் குறித்தும் விரிவாக விளக்கமளித்தார். "அதனடிப்படையிலேயே தனிநபர் வருமானத்திலிருந்து வரி விதிக்கப்படுகிறது. இது ஆசிய நாடுகளுடன் ஒப்பீட்டளவில் மிகக் குறைவான சதவீதம்." என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் நிதி நிலைமை, வரி விதிப்பு தொடர்பிலுள்ள தனிநபர் பிரச்சினை, தனிநபர் வருமான வரி தொடர்பான வரி சீர்திருத்தங்கள், தனிநபர் வருமான வரிகளை அதிகரிப்பது மற்றும் வரி சீர்திருத்தத்தின் தாக்கங்கள் ஆகியவை தொடர்பிலும் கலாநிதி கபில சேனாரத்ன விளக்கமளித்தார்.

புதிய வரிச் சட்டத்துக்கமைய வரி செலுத்தப்பட வேண்டிய நபரிடமிருந்து தனிநபர் வருமானம் கணக்கிடப்படும் முறை தொடர்பில் உள்நாட்டு வருமானத் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதி வருமான ஆணையாளர் கே.கே.ஐ எரந்த பல்வேறு வரிச் சட்டங்களை கோடிட்டுக் காட்டியதன் மூலம் விளக்கினார்.

இக்கூட்டத்திற்கு வருகை தந்திருந்த தொழிற்சங்கத் தலைவர்கள், இப்புதிய வரிக் கொள்கை காரணமாக தனிநபர் வருமானம் அடிப்படையில் அறவிடப்படும் வரியில் பிரச்சினை இருப்பதாகவும் வரிக் கொள்கையை தயாரிப்பதற்கு முன்னதாக தொழிற்சங்கங்களுடன் பேச்சு நடத்துமாறும் கேட்டுக் கொண்டனர்.

ஏனைய நாடுகளைப் போன்றே விதிக்கப்படும் வரிகளுக்கு ஏற்ற நியாயமான சேவை பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும், புதிய வரிச் சட்டத்தால் தொழில்துறையைச் சார்ந்தோர் எதிர்கொள்ளும் அசௌகரியங்களைக் குறைப்பதற்கு உடனடி தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் என்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் மேலும் கோரினர்.

உள்நாட்டு வருமானத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் டபிள்யூ.எம்.ஜி குமாரதுங்க, நிதியமைச்சின் அரச நிதிக் கொள்கைப் பிரிவின் வரி ஆலோசகர் தனுஜா பெரேரா, பிரதமரின் தொழிற்சங்கச் செயலாளர் சந்திரரத்ன பல்லேகம உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# தடுப்புக்காவலின்போது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது உண்மை

## நிரூபிக்கத் தயாராகவுள்ளதாக வசந்த முதலிகே தெரிவிப்பு



தன்னை தடுப்புக் காவலில் வைத்து உயிர்அச்சுறுத்தல் விடுத்தது பொய் என்றால் அதனை நீதி அமைச்சர் உறுதிப்படுத்த வேண்டும். அதேபோன்று, தனக்கு நடந்த அநீதிகளை உறுதிப்படுத்த தான் தயாராக இருப்பதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

மேலும் எதிர்காலத்தில் தனக்கு நடந்த அநீதிக்கு நட்டஈடு கோரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவும் எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

வசந்த முதலிகே உள்ளிட்ட மேலும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்களை கைதுசெய்து, அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்து பொலிஸ் திணைக்களத்தில் நேற்று முறைப்பாடொன்றை பதிவு செய்ததன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ கடந்த அரசாங்கங்களில் செயற்பட்ட விதம் மற்றும் கருத்துகளை நாங்கள் நன்கறிவோம். நாங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளை ஊடகங்களினூடாக வெளிப்படுத்தி, அதனுடன் தொடர்புடை சட்டரீதியான முறைப்பாட்டையும் பொலிஸ் மா அதிபர் திணைக்களத்தில் பதிவு செய்திருக்கிறோம். இவ்வாறான சூழ்நிலையில் பொய்களை சோடிப்பதற்கான அவசியம் எங்களுக்கு இல்லை.

சட்டம் ஒழுங்கு தொடர்பில் நாட்டில் பாரதூரமான பிரச்சினை இருக்கிறது என்பதாலேயே இந்த எங்களின் செயற்பாடுகளில் உறுதியாக இருக்கிறோம். அதன் காரணமாகவே எங்களின் பிரச்சினைகளுக்காக குரல்கொடுத்தும் வருகிறோம்.

அவ்வாறெனில், எனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கவில்லை என்பதை விசாரணைகளை முன்னெடுத்து நீதி அமைச்சரால் உறுதிப்படுத்த முடியும். அதேபோன்று, எங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்தவும் நாங்கள் தயாராக இருக்கிறோம். அதன் காரணமாகவே வழக்கு பதிவு செய்திருக்கிறோம். நீதிமன்றத்திலும் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்திருக்கிறோம். எதிர்காலத்தில், சகல அநீதிகளுக்கும் நட்டஈடுகோரி வழக்குத் தாக்கல் செய்யவும் எதிர்பார்த்திருக்கிறோம் என்றார்.

# பரீட்சை விடைத்தாள் திருத்துவோருக்கு கொடுப்பனவை அதிகரிக்க அனுமதி

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபடும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கான கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவையில், கொள்கை அடிப்படையிலான தீர்மானம் எட்டப்பட்டதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கூறுகையில்,

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தப்பணிகள் தொடர்பில் கல்வி அமைச்சர் அமைச்சரவையில் பேசியிருந்தார். விடைத்தாள் திருத்தும் பணிகளுக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட பயற்சிகளை பெற்ற ஆசிரியர்களே முன்னெடுப்பார்கள்.

இந்நிலையில், அவர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு கோரி அமைச்சரவை பத்திரமொன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆனாலும், நாட்டில் தற்போதுள்ள நிலைமையில் இதனை செய்ய முடியாது என்று நிதி அமைச்சர் அறிவித்திருந்தார். தீர்வு இருக்குமாக இருந்தால் இதுகுறித்து இரண்டு முறைகள் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை.

தற்போதுள்ள நிலைமையில் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் காலத்தாமதமானால் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் என்பதால், கொள்கையின் அடிப்படையில் தற்போதிருக்கும் கொடுப்பனவுகளை விட அதிக தொகையை பெற்றுக்கொடுக்க கொள்கை ரீதியான அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டது. கொள்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய அதிகரிக்கப்பட்ட அந்த கொடுப்பனவை பெற்றுக்கொடுப்பதற்காக நிதி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி, மாணவர்களின் நலன் கருதி விரைவாக பெறுபேறுகளை வெளியிடுமாறும் நிதி அமைச்சர் ஆலோசனை வழங்கியிருந்தார்.

### 13க்கு மேலதிகமான...

தென்பகுதியில் உள்ள பௌத்த பிக்குகள் அடங்கிய சர்வமத குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு வடபகுதியில் உள்ள சர்வமதத் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடினர்.

அந்தக் கலந்துரையாடலுக்கு பின்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே பௌத்த பிக்குகள் உட்பட சர்வமதத் தலைவர்கள், 13ஆவது திருத்தத்திற்கு மேலதிகமாக தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என அறிவித்தனர்.

### 55 வேலைத்திட்டங்களை...

முடிவு செய்யப்பட்டுள்ளது.

46 திட்ட அலுவலகங்கள் குறைந்தபட்ச ஊழியர்களின் கீழ் இயங்க வேண்டும் என்றும் இது தொடர்பான குழு அறிக்கை பரிந்துரைத்துள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

நாடு எதிர்நோக்கும் நிதி நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் பாரிய வேலைத்திட்ட அலுவலகங்களை பராமரிக்க முடியாத நிலையில், குழுவொன்றை நியமித்து அந்த திட்ட அலுவலகங்களை மதிப்பீடு செய்ய ஜனாதிபதி தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### முக்கிய சேவைகள்...

செய்யப்பட்டுள்ளன. இந்தப் பேரணி இன்று நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### முடியுமானால் மக்களுக்கு...

என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (07) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் தொடர்பில் அனுமானத்தின் அடிப்படையில் தீர்மானம் எடுக்க முடியாது. நாளை (இன்று) அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுமாக இருந்தால், நாட்டு மக்களுக்கு ஏதாவது நிவாரணம் வழங்க முடியுமாக இருந்தால் அதனை நிச்சயமாக பெற்றுக்கொடுப்போம் என்பதை தெளிவாக குறிப்பிட விரும்புகிறோம். மக்களின் கஷ்டங்களை நாங்களும் நன்றாக அறிவோம்.

நாட்டின் நாளாந்த செயற்பாடுகளை மக்களிடமிருந்து அறவிப்படும் வரிப்பணத்திலிருந்தே முன்னெடுத்துச் செல்கிறோம். கடந்த வருடம் மொத்த தேசிய உற்பத்தியில் 8.3 சதவீதமே அரச வருமானமாக கிடைக்கப் பெற்றுள்ளது. ஏனைய நாடுகளை எடுத்துக் கொண்டால் ஐந்தில் ஒரு பங்கு அல்லது அதனை விட அதிகமாக அரச வருமானம் கிடைக்கிறது.

எமது நாட்டை பொறுத்தவரையில் அரச வருமானம் படிப்படியாக அதிகரிக்கப்படவில்லை. அதற்கு பதிலாக தவறான ஆலோசனைகளின் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, அரச அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த வருமான வரியை பாரியளவில் குறைத்தார். அதன்போது, யாரும் கோராத சந்தர்ப்பத்தில் வரியை குறைத்து நிதி அமைச்சர் பாரிய நட்டத்தை ஏற்படுத்திவிட்டதாகவே அப்போது குற்றச்சாட்டு முன்வைத்தார்கள். இந்த வரிகுறைப்பினால் நாட்டின் நிலைமை உக்கிரமடைந்து அரச வருமானம் வீழ்ச்சியை சந்தித்ததன் பின்னர், தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள வேண்டியது அவசியமானவொன்றாக இருக்கிறது.

அவ்வாறு, சர்வதேச நாணய நிதியத்துடன் எந்தவொரு ஒப்பந்தத்தையும் மேற்கொள்ளாமல் நாட்டில் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்று யாராவது கூறுகிறார்கள் என்றால், சர்வதேச நாணய நிதியத்தின் உதவி தேவையில்லை, அவர்களின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள முடியாது, எந்தவொரு மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கும் இணங்கப் போவதில்லை, உள்நாட்டு வளங்களினூடாக எங்களின் செயற்பாடுகளை முன்னெடுப்போம் என்று அவர்கள் மக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். மாற்றுத் தீர்வுகள் இருந்தால் அதனை ஏற்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பொது இணக்கப்பாட்டுக்கு வராவிட்டால் சர்வதேச கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்படும். அவ்வாறு சர்வதேச உறவுகளின்றி நாட்டை முன்னெடுக்க முடியும் என்று யாராவது எண்ணுவார்களாக இருந்தால் அவர்களுக்கு மனநோய் ஏற்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் அவ்வாறு கூறமாட்டார்கள் என்றார்.

### வீதிகளைப் பயன்படுத்த...

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (07) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடகங்களுக்கு மீள்புறள்வு வரி எதுவும் விதிக்கும் தீர்மானம் இல்லை. இருந்தபோதும் வீதிகளை பராமரிக்கும் நடவடிக்கைகளில் பிரச்சினையை சந்தித்திருக்கிறோம். எனவே, வீதிகளுக்கு அவ்வாறானவொரு வரி இருக்கிறது.

வெள்ளப்பெருக்கு, மழைக் காலங்களில் வீதிகள் சேதமடையலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அதிவேக நெடுஞ்சாலை உள்ளிட்ட வீதிகளின் பராமரிப்பு பணிகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். அதற்கான நிதி எம்மிடம் இல்லை. பாதை நிர்மாணப் பணிகள் மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன.

தற்போதைய சந்தர்ப்பத்தில் வீதிகளில் அமர்ந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்தாலும் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. அதன் காரணமாக வீதி பராமரிப்பு செயற்பாடுகளுக்காக புதிய நிதியத்தை உருவாக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அந்த நிதியத்துக்காக அரசாங்கம் 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யும். இந்நிலையில் இந்த நிதியம் குறித்து நிதி அமைச்சுடனும் கலந்துரையாடி வருகிறோம். வீதிகளை பயன்படுத்துபவர்களிடம் எரிபொருளினூடாகவோ அல்லது வேறு வழிமுறைகளினூடாகவோ ஒவ்வொரு மாதமும் இந்த நிதியத்தினூடாக திரட்டி, அந்த நிதியினூடாக நாடு பூராகவும் இருக்கும் வீதி கட்டமைப்புகளையும் பராமரிக்க தீர்மானித்திருக்கிறோம்.

தேவையான நிதியில்லாமல் நாடு முழுவதிலும் இருக்கும் வீதிகளை எவ்வாறு பராமரிப்பது என்ற பிரச்சினையும் எழுந்திருக்கிறது. இவ்வளவு காலமும் இந்த பராமரிப்பு பணிகள் பணம் அச்சிட்டும் கடன் பெற்றுமே முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. தொடர்ந்து அதனை செய்ய முடியாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

### தேசிய சுதந்திர தின...

போலிப் பிரசாரங்கள் குறுகிய அரசியல் செயல்முறையின் மற்றொரு தொடர்ச்சியையே எடுத்துக் காட்டுகிறது.

பொய்யான தகவல்கள் மூலம் மக்களைத் தவறாக வழிநடத்தி, அரசாங்கத்தை மக்கள் வெறுக்கச் செய்வதும், அரசாங்கத்தை அசௌகரியப்படுத்துவதன் மூலம் அவர்களின் அரசியல் நலன்களை நிறைவேற்றுவதுமே இதன் நோக்கமாக இருக்க வேண்டும்.

அதற்காக, சுதந்திர தின விழாவின் போது நடமாடும் கழிப்பறை வசதியை ஏற்படுத்தி கொடுத்தது கூடத் தவறு என்று மக்களை நம்ப வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில், அழைப்பின் பேரில் உயர்மட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகளான ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் டக்கி ஷுன்சுகே, பூட்டானின் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சர் ஜெய் பிர் ராய் மற்றும் மாலைத்தீவு வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா ஷாஹித், பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஏ.கே. அப்துல் மொமன், பாகிஸ்தான் வெளிவிவகார இணை அமைச்சர் ஹினா ரப்பானி கர், இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் வி. முரளீதரன், நேபாள வெளிவிவகார அமைச்சர் கலாநிதி பிமலா ராய் பௌத்யால், பொதுநலவாயத்தின் பொதுச் செயலாளர் பெட்ரீசியா ஸ்கொட்லன்ட் ஆகியோர் பங்கேற்றனர்.

மேலும் வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட சுமார் 3200 உயர் அதிகாரிகளும் முப்படை மற்றும் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த சுமார் 6670 உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பெருமளவானோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

மேலும், சுதந்திர தின விழாவை முன்னிட்டு பயிற்சியில் ஈடுபட்டவர்களுக்காக இந்த நடமாடும் கழிப்பறை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

இவ்வாறானதொரு பின்னணியில், ஆயிரக்கணக்கான மக்கள் கூடும் நிகழ்வில் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உரிய முறையில் உறுதிப்படுத்தும் நடவடிக்கையாக, போதுமான நடமாடும் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதை தேவையற்ற செலவு என்று கூற முடியாது.

அதிகளவான மக்கள் கூடும் உத்தியோகபூர்வ அரச நிகழ்வில் இவ்வாறான ஒரு அம்சம் தொடர்பில் போதிய கவனம் செலுத்தாமை நாட்டுக்கே அவமானம் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அத்துடன், கல்விக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் இருந்து 5.8 மில்லியன் ரூபாவை இந்த நிகழ்வுக்காக அரசாங்கம் செலவிட்டுள்ளதாக வெளியான செய்தி முற்றிலும் பொய்யானது.

இந்த நிகழ்விற்கான ஆரம்ப செலவை கல்வி அமைச்சு மதிப்பிட்டிருந்த போதிலும், அந்த பணம் எதுவும் செலவிடப்படவில்லை.

தேசிய சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் உத்தியோகபூர்வ அரச விழாவிற்கு நிதி ஒதுக்கீடு செய்வது பொதுவானதொரு விடயமாகும். மேலும் இந்த ஆண்டு நடைபெற்ற 75ஆவது தேசிய சுதந்திர தின விழாவின் அதிகாரபூர்வ அரச விழாவிற்கு செலவிடப்பட்ட தொகையானது மதிப்பிடப்பட்ட தொகையை விடவும் மிகக் குறைவு என்பதை வலியுறுத்த வேண்டும்.

அதன்படி, இவ்வருடம் நடைபெற்ற 75 ஆவது தேசிய சுதந்திர தின விழாவிற்கு அரசாங்கம் செலவிட்ட மொத்தத் தொகை 11,130,011 ரூபா 29 சதங்கள் மட்டுமே ஆகும்.

மேலும், கடந்த சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கு செலவிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டு சுதந்திர தின விழாவுக்காக அரசாங்கம் மிகக்குறைவாகவே செலவிட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

நாடு கடும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வரும் வேளையில் இப்படி ஒரு அரச விழாவை நடத்துவது நாட்டை மீண்டும் எழுச்சி பெறத் தயார் செய்வதாகத் தெரிகிறது. மறுபுறம், இலங்கையை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு தேவையான துணிச்சல் இலங்கை அரசிடம் இருப்பதாகவும், நெருக்கடியால் வீழ்ச்சியடைந்த இலங்கையின் பெருமையை மீட்டெடுக்க நாடு தயாராக உள்ளது என்றும் இந்நிகழ்வின் மூலம் உலகிற்குச் சொல்லும் செய்திகளாக அமைந்துள்ளன.

எனவே, குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தேசிய சுதந்திர தினம் போன்ற பெருமைக்குரிய அரச நிகழ்வு தொடர்பில் மேற்கொள்ளப்படும் பொய்ப் பிரசாரங்களை ஜனாதிபதி அலுவலகம் வருத்தத்துடன் நிராகரிக்கிறது.

### தேர்தலை காலந்தாழ்த்த...

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதென்றால் நாட்டின் வருமானத்துக்கு மாற்று யோசனையை எதிர்க்கட்சி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன் தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (07) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கத் தரப்பு தேர்தலை காலந்தாழ்த்துவதற்கு எந்த யோசனையும் கொண்டுவராது கணக்கறிக்கைகள், அரசாங்கத்தால் செய்யக்கூடிய விடயங்கள், செய்ய முடியாத விடயங்கள் என்பன தொடர்பில் நீதிமன்றத்துக்கு தெளிவாக அறிவித்திருக்கிறோம். மாதாந்தம் 200 பில்லியன் ரூபா இடைவெளியிலேயே எமது வருமானம் அமைந்திருக்கிறது. நிதி அச்சிட்டே கடன்களை மீளச் செலுத்த மத்திய வங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, வரவு - செலவுகளை அவதானித்து இதற்கு மாற்றுத்தீர்வு எதுவும் இருக்கிறதா என்பதை முன்வைக்க வேண்டியதே அனைவரதும் பொறுப்பாக இருக்கிறது.

இந்தப் பொறுப்பு பாராளுமன்றத்துக்கே வழங்கப்பட்டிருக்கிறது. அரசியலமைப்பின் 148ஆவது உறுப்புரையின் பிரகாரம் அரச நிதி தொடர்பான பொறுப்பு பாராளுமன்றத்துக்கு இருக்கிறது. எனவே, பாராளுமன்றத்தில் மாதாந்த வருமானத்துக்கும் செலவுக்கும் இடையில் இருக்கும் இடைவெளியை நிரப்புவது தொடர்பில் எதிர்க்கட்சி உள்ளிட்ட தரப்பினால் யோசனை முன்வைக்க முடியும். அவ்வாறு மாற்று வழிமுறைகள் இருக்குமாக இருந்தால் அதனை முன்வைப்பது எதிர்க்கட்சியின் பொறுப்பாகும். நான் அறிந்த வரையில் அவ்வாறானவொரு வழிமுறை இருப்பதாக தெரியவில்லை.

# தமிழ் முற்போக்குக் கூட்டணியுடன் அமெரிக்கத் தூதுவர் சந்திப்பு





மலையகம் பற்றிய உலக அவதானத்தை முன்னெடுக்கும் நோக்கில், மனோ கணேசன் எம்.பி. தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி குழுவினரை நுவரெலியாவுக்கு பயணம் செய்துள்ள அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தலைமையிலான குழுவினர் சந்தித்துள்ளனர்.

இதன்போது தமிழ் முற்போக்குக் கூட்டணி குழுவில், வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி, எம். உதயகுமார் எம்.பி, எம். பரணீதரன், ஆர்,ராஜாராம், விஸ்வநாதன் ஆகியோரும், அமெரிக்கத் தூதுவர் குழுவில், அரசியல் துறை பொறுப்பாளர் ரூபி, யூ.எஸ்.எயிட் துணை பணிப்பாளர் டிம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறி 8 பேரை தாய்லாந்துக்கு அனுப்பியவர் கைது

வேலைவாய்ப்பைப் பெற்றுத்தருவதாக தெரிவித்து 08 பணியாளர்களை தாய்லாந்தினூடாக லாவோஸுக்கு சட்டவிரோதமாக அனுப்பிவைத்த இன்னுமொரு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டு, எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், மற்றுமொரு நபர் இனங்காணப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

எனவே, வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும்போது இவ்வாறு மனித வியாபாரம் செய்பவர்களிடம் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் அந்த பணியகத்தின் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொது முகாமையாளருமான பீ.ஜீ.ஜீ.எஸ்.யாப்பா தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை பணியாளர்களை மனித வியாபாரத்துக்குப் பயன்படுத்திய சம்பவங்கள் கடந்த காலங்களில் பதிவாகியிருந்தன. குறிப்பாக, ஓமானுக்கு பணியாளர்களை கடத்திச்சென்ற சம்பவமும் பதிவாகியிருந்தது. அதன்பின்னர் மலேசியா தொடர்பான சம்பவமும் பதிவாகியிருந்தது. இந்நிலையில், இதேபோன்றதொரு சம்பவம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் பணியகத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

தாய்லாந்தினூடாக லாவோஸுக்கு இலங்கை பணியாளர்கள் சட்டவிரோதமாக வியாபார நோக்கில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் முறைப்பாடும் பதிவுசெய்யப்பட்டிருந்தது. அந்த முறைப்பாடு தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட தொடர் விசாரணைகளில் அம்பலாந்தொட்ட பிரதேசத்தில் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் அம்பலாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவரை 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதுவரையில் ஐந்து இலங்கையர்கள் விசாரணைகளுக்காக தாய்லாந்தின் குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்தின் பொறுப்பில் இருக்கிறார்கள். அதேபோன்று, இதற்காக 08 இலங்கையர்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இது பாரதூரமான பிரச்சினையாகும்.

இவர்களை தாய்லாந்தினூடாக லாவோஸுக்கு அழைத்துச்செல்லவே முயற்சித்திருக்கிறார்கள். எங்களுக்குக் கிடைத்திருக்கும் தகவல்களின் அடிப்படையில் இதுவரையில் மூவர் லாவோஸில் இருக்கிறார்கள். அவர்களை விரைவாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

எனவே, தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு செல்லும்போது கடவுச்சீட்டு தொடர்பில் மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், இந்த வியாபாரிகளிடம் சிக்கி உங்களின் பிரதான நோக்கத்துக்கப்பால் பல்வேறு பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். ஏதாவது பிரச்சினை தெளிவின்மை இருக்குமாக இருந்தால் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளுங்கள். இந்தச் சம்பவத்தில் இன்னுமொரு சந்தேகநபரும் இனங்காணப்பட்டுள்ளர். நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய அவரையும் கைதுசெய்யவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# 200 கோடி ரூபா கடனில் இலங்கை மின்சார சபை

## 400 கோடி ரூபா மின்கட்டணம் நிலுவையில்

இலங்கை மின்சார சபையின் சேவைக்காக பெற்றுக்கொண்ட கடன் தொகையில் 200 கோடி ரூபா நிதியை செலுத்தவேண்டியுள்ளதாகவும் மேலும் மின்சார சபைக்கு வரவேண்டிய மின்கட்டணத்தில் 400 கோடி ரூபா நிலுவையில் இருப்பதாகவும் மின்சார சபை தொழிற்சங்க ஒன்றியத்தின் செயலாளர் ஏ.ஜி.யு.நிஷாந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (07) நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அறவிட முடியாத கடன்களாக தள்ளுபடிசெய்ய உள்ள மின் கட்டணங்களில் பெரும்பாலானவை அரசியல்வாதிகள் மற்றும் மோசடி வர்த்தகர்கள் செலுத்தவேண்டிய கட்டணங்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறானவர்கள் சுமார் 6 மாதங்களுக்கு மேலாக மின்கட்டணங்கள் செலுத்தாத போதிலும் அவர்களின் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கவில்லை.

கட்டணம் செலுத்தாதவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு பிரதேசத்துக்குப் பொறுப்பான பொறியியலாளருக்குரியது என்ற போதிலும் அவர்கள் அவ்வாறு செயற்படாமை சிக்கலுக்குரியது என்றும் தெரிவித்தார்.

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியில் பல்வேறு நபர்களின் கருத்துகளையும் செவிமடுக்காது பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். மேலும் 300 அலகுகளுக்கு அதிகமாக மின்சாரம் பாவிப்போருக்கு மின் கட்டணத்தை அதிகரிப்பதுடன், 300 அலகுக்கு குறைவாக பாவிப்போருக்கு சலுகைகளை வழங்கவேண்டும்.

அங்கு, இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கத்தின் தலைவர் மாலக விக்கிரமசிங்க கருத்து தெரிவிக்கையில், அரசியல்வாதிகள், மோசடியான வர்த்தகர்கள், சந்தர்ப்பவாத தொழில் வல்லுநர்கள் மற்றும் நேர்மையற்ற அதிகாரிகள் இணைந்து இலங்கை மின்சார சபையை அழித்துள்ளதாகவும், அதனை இலாபகரமான நிறுவனமாக மாற்றுவதற்கு மின்சார சபை உண்மையான மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் மற்றும் மோசடி வியாபாரிகளிடம் நிலுவையில் உள்ள கட்டணத்தை வசூலிப்பதன் ஊடாக மின்சார சபை ஊழியர்கள், நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊழியர்கள், துறைமுக அதிகாரசபை ஊழியர்கள் மற்றும் எரிபொருள் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான மேலதிக கொடுப்பனவுகளை வழங்கமுடியும் என இலங்கை மின்சார சபையின் தொழில்நுட்பப் பொறியியலாளர் மற்றும் மேற்பார்வையாளர் சங்கத்தின் செயலாளர் நளீன் படபெத்த தெரிவித்தார்.

மின்சார சபையை மீட்பதற்காக 14 யோசனைகள் அடங்கிய மகஜர் ஒன்றை மின்சார சபையின் தலைவருக்கும் மின்சக்தி மற்றும் வலுசக்தி கையளிக்கவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொறியாளர் மற்றும் அத்தியட்சகர் சங்கத்தின் பிரதம உறுப்பினர் நந்தன உதயகுமார தெரிவித்தார்.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலிருந்து எஞ்சிய உலோகங்களை உரிய வரிகளை செலுத்தாமல் அகற்ற அமைச்சு அனுமதிக்காது



## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

உரிய வரிகளை செலுத்தாமல் எக்ஸ்பிரஸ் பேர்ள் (MV X-Press Pearl) கப்பலிலிருந்து பழைய உலோகத்தை அகற்றுவதற்கு அமைச்சு அனுமதிக்காது - என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் தீப்பிடித்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் ஜூன் 2021இல் மூழ்கியது.

நாட்டின் கடற்பரப்பிற்குள் இருந்து கப்பலின் உலோகம் அகற்றப்பட வேண்டுமாயின், அதற்கான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி அனுமதிப்பத்திரமும் பெறப்பட வேண்டுமென ஜனாதிபதியுடனான கலந்துரையாடலின்போது இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய சுட்டிக்காட்டினார்.

குறித்த கப்பலில் சுமார் 48,000 மெற்றிக் தொன் உலோகம் உள்ளதாகவும், இதன்மூலம் இலங்கைக்கு கணிசமான அளவு வரி கிடைக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டின் கடற்பரப்பிற்குள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு விடயமும் நாட்டின் தற்போதைய சட்டங்களுக்கமையவே கையாளப்பட வேண்டும் என அவர் மேலும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதன் விளைவாக, கப்பலில் உள்ள உலோகம் பழைய உலோகமாக வகைப்படுத்தப்படும். எந்தவொரு தரப்பினரும் உலோகத்தை எடுத்துச்செல்ல விரும்பினால், அவர்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிமத்தைப் பெற வேண்டும், மேலதிகமாக அவர்கள் சுங்க வரி செலுத்த வேண்டும். சுங்கச் சட்டத்தின்படி, இந்த இரும்புகளின் மதிப்பில் 10% செஸ் வரி விதிக்கப்பட வேண்டுமென அவர் கூறினார்.

# துருக்கிக்கு மீட்புப் பணிகளுக்காக செல்ல 300 பேர் அடங்கிய குழு தயார் நிலையில்!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



துருக்கியில் ஏற்பட்டுள்ள நிலநடுக்கத்தில் சிக்குண்டவர்களை மீட்பதற்காக இலங்கையிலிருந்து 300 பேர் அடங்கிய குழு தயார் நிலையில் உள்ளது.

ஒத்துழைப்புகளுக்காக துருக்கி கோரிக்கை விடுக்கின்ற எந்த சந்தர்ப்பத்திலும் இராணுவ குழுவொன்றை அனுப்புவதற்குத் தயார் என வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அதற்காக பொறியியலாளர்கள் மற்றும் வைத்தியத்துறை உறுப்பினர்கள் அடங்கிய சுமார் 300 இராணுவச் சிப்பாய்கள் தயார் நிலையில் உள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# மஹபொல புலமைப்பரிசில் இன்மையால் பல்கலைக்கழக மாணவர்கள் பெரும் சிரமம்




பல்கலைக்கழக மாணவர்கள் பல மாதங்களாக மஹபொல புலமைப்பரிசில் பணம் பெற்றுக் கொள்ளப்படாததால் மிகவும் சிரமத்திற்குள்ளாகியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

10 தவணைகளுக்கும் மேலாக மஹபொல புலமைப்பரிசில் கிடைக்காமையால் பல்கலைக்கழக மாணவர்கள் கடும் சிரமத்தை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இந்நிலைமையால் தனியார் விடுதிகளிலிருந்து கல்வி கற்கும் மாணவர்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகி வருவதாகவும் அவர்களில் சிலர் ஒருவேளை உணவை மாத்திரம் உட்கொண்டு கல்வியை மேற்கொண்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# தென்கொரியாவில் இலங்கையர்களுக்கு இவ்வருடம் 6500 வேலைவாய்ப்புகள்

இலங்கையர்களுக்கு இவ்வருடம் தென்கொரியா 6,500 வேலைவாய்ப்புகளை வழங்கவுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (SLBFE) தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் மொத்தமாக 5,047 வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். இந்த ஆண்டு கிடைத்த வேலைவாய்ப்புகள் கடந்த ஆண்டை விட 28.79% அதிகரித்துள்ளன. இந்தவகையில் இவ்வருடம் 1,453 வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளது.

மேலும் தென் கொரியா அதிக வேலைவாய்ப்புகளை வழங்குவது இலங்கை வரலாற்றில் இதுவே முதல்முறை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த 6,500 பணி வெற்றிடத்துக்கு, 14 ஆயிரத்து 588 விண்ணப்பதாரர்களை காத்திருப்போர் பட்டியலில் உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது

மேலும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக உற்பத்தித் துறையில் 12 ஆயிரத்து 189 பேருக்கும், மீன்பிடித் துறையில் இரண்டாயிரத்து 149 பேருக்கும், கட்டுமானத் துறையில் 250 பேருக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் நாணயக்கார கொரிய மனிதவளத் திணைக்களத்திடம் விடுத்த தொடர்ச்சியான வேண்டுகோளின் அடிப்படையில் கடந்த ஆண்டு, 5,047 வேலைவாய்ப்பு ஒதுக்கீடு இருந்தாலும் 6,639 பணியாளர்களை அனுப்ப முடிந்தது.

இந்த ஆண்டும் கிடைத்த வேலை ஒதுக்கீட்டை விட அதிகமான தொழிலாளர்களை அனுப்ப முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# சரண குணவர்தனவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

முன்னாள் பிரதி அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் சரண குணவர்தனவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று (07) குற்றப்பத்திரிகை ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், சந்தேகநபருக்கு 50,000 ரூபா மற்றும் 05 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா அனுமதி வழங்கினார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் முன்னிலையாகுமாறு விடுக்கப்பட்ட அறிவுக்கமைய முன்னாள் பிரதி அமைச்சர் நீதிமன்றில் நேற்று (07) ஆஜராகினார்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளன.

பிரதிவாதிக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக சரண குணவர்தன கடமையாற்றியபோது, லொத்தர் சபைக்குத் தேவையான வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளும்போது முறையான நடைமுறைகளை பின்பற்றாமை காரணமாக அரசாங்கத்திற்கு சுமார் 9 இலட்ச ரூபா நஷ்டம் ஏற்படுத்தியதாகக் கூறி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் தை மாதம் 25ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்** புத்திரர்களால் சற்று மனக்கவலை ஏற்படும், அதிர்ஷ்ட வாய்ப்புகளை நழுவ விடுவீர்கள்.

**ரிஷபம்** குடும்பத்தில் மகிழ்ச்சியும் அன்பும் அமையும் நாள், உணர்வுகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளுங்கள்.

**மிதுனம்** நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும் நாள், புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** தேவையற்ற செலவுகளால் பணத்தை இழப்பீர்கள், வாய்வார்த்தைகளால் குழப்பங்கள் ஏற்படும்.

**சிம்மம்** உடல் நலம் சீராக இருக்கும், நண்பர்கள் சந்திப்பால் நன்மைகள், உதவிகள் உள்ளன

**கன்னி** உங்கள் மதிப்பினை நீங்களே கெடுத்துக்கொள்ளாதீர்கள், உணவு, உறக்கம் இன்றி சிரமப்படுவீர்கள்.

**துலாம்** எந்த வேலையையும் மிக எளிதில் முடிப்பீர்கள், சகாக்கள் மூலம் உதவிகளைப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்** எதிர்கால வாழ்க்கைப் பற்றிய சிந்தனைகளில் இருப்பீர்கள், நண்பரின் உதவியால் ஆனந்தமடைவீர்கள்.

**தனுசு** நீங்கள் எண்ணிய வெளிநாட்டுப் பயணம் நிறைவேறும், யாரையும் வீணே பகைத்துக்கொள்ளாதீர்கள்.

**மகரம்** உடலைக் கெடுக்கும் எந்த முயற்சியும் நன்மை தராது, கோபத்தை குறைத்துக்கொண்டால் லாபம் உண்டு.

**கும்பம்** காதல், திருமணம் கைகூடும், உல்லாசமாகவும், மகிழ்ச்சியாகவும் இன்றைய நாளைக் கழிப்பீர்கள்.

**மீனம்** சில விடயங்களுக்காக மற்றவர்களுக்கு நீங்கள் கட்டுப்பட்டேயாக வேண்டும். டென்ஷன் வேண்டாம்.

| | |
|---|---|
| திதி | :திரிதியை முழு நாளும் |
| நட்சத்திரம் | :பூரம் இரவு 8.14 வரை பின் உத்தரம் |
| யோகம் | :அமிர்தசித்த யோகம் (சுப காரியம் நன்மை) |
| வார சூலை | :தென் மேற்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| நல்ல நேரம் | :மு.ப. 9.33 – 10.33 மணி வரை |
| ராகு காலம் | :12.33 – 2.03 மணி வரை |
| எமகண்டம் | :8.03 – 9.33 மணி வரை |
| குளிகை | :11.03 – 12.33 மணி வரை |
| சந்திராஷ்டமம் | :மகர ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| தன அதிஷ்டம் | : அசுவினி, மகம், மூலம் (பிறந்தவர்களுக்கு) |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்** (ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம். தொலைபேசி : 077-0525325 078-6759739

# எல்பிட்டியவில் போலி இறப்பர் முத்திரைகள் மீட்பு

எல்பிட்டிய பிரதேச சபையின் நீர் விநியோக பகுதியிலுள்ள கட்டடத்தின் அறையொன்றிலிருந்து நாட்டின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த அரச அதிகாரிகள் பயன்படுத்தும் இறப்பர் முத்திரைகளை போன்ற ஒரு தொகை போலி இறப்பர் முத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய குறித்த போலி இறப்பர் முத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

போலி ஆவணங்களைத் தயாரிப்பதற்காக இந்த இறப்பர் முத்திரைகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகளின் அதிபர்கள், சட்டத்தரணிகள், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகளின் உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரைகளைப் போன்ற போலி இறப்பர் முத்திரைகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபரின் வீட்டில் ரூ.17 இலட்சம் பெறுமதியான தங்க நகை கொள்ளை

## சந்தேக நபர் ஆனமடுவ பிரதேசத்தில் கைது

ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ் மா அதிபர் சரத் லுகொடவின் கொஹுவல இல்லத்தில் 17 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை திருடிய 19 வயதுடைய சந்தேக நபர் ஆனமடுவ பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரை கல்கிஸை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்தபோது, திருடப்பட்ட தங்கப் பொருட்கள் பல்வேறு இடங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு அனைத்து பொருட்களும் உருக்கப்பட்டிருந்தமை



கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி, ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் குடியிருப்பாளர்கள் வீட்டை விட்டு வெளியில் சென்றிருந்தபோது வீட்டுக்குள் புகுந்து திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார்.

சந்தேக நபர் திருட வந்தபோது, ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ் மா அதிபரின் வீட்டின் முன்பு கைத்தொலைபேசியை காதில் வைத்துக்கொண்டு காத்திருப்பது அங்கிருந்த சிசிரிவி கெமராவில் பதிவாகியுள்ளது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் தலங்கம, மிரிஹான மற்றும் கல்கிஸை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழன்
THAMILAN தமிලන්
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, பெப்ரவரி 08ஆம் திகதி, புதன்கிழமை

# நாட்டு நிலைமையறிந்து செயற்படுவாரா ரணில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அக்கிராசன உரை, இன்று (08) பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ள நிலையில், பல்வேறு கோரிக்கைகள் மற்றும் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில், அரசியல் கட்சிகள், பிக்குகள், சிவில் அமைப்புகள் எனப் பல்வேறு தரப்பினர், கொழும்பின் பல பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்களை இன்று முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்திருக்கிறார்கள்.

மேலும், அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அவசர சிகிச்சைப் பிரிவு தவிர்ந்த ஏனைய சகல சிகிச்சைப் பிரிவுகளும் இன்று முடங்குமென்றும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்திருக்கிறது.

பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர், கடந்த 27ஆம் திகதிமுதல் இன்று 08ஆம் திகதிவரை ஜனாதிபதியினால் ஒத்திவைக்கப்பட்டது. அதற்கமைய, இன்று கூடவுள்ள பாராளுமன்ற கூட்டத்தொடரின்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அக்கிராசன உரையின்போது நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி, தேர்தல் செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கவனம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் தொழிற்சங்கங்கள் பாரியளவான எதிர்ப்பு நடவடிக்கையொன்றை முன்னெடுக்கவுள்ள அதேசமயம், வைத்தியத்துறைசார் தொழிற்சங்கங்கள் மாத்திரமின்றி, சகல துறைசார் தொழிற்சங்கங்களும் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளன.

பாராளுமன்ற அமர்வுகளை ஒத்திவைத்து இன்று மீண்டும் புதிய அமர்வை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கும் ஜனாதிபதி ரணில், தேர்தலை ஒத்திவைக்கும் ஏற்பாட்டுக்கான அடித்தளத்தை இடும் வகையில் பேசுவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. அது ஜனநாயக விரோத செயல் என்று கருதியே இன்று தொழிற்சங்கங்கள் எதிர்ப்பை இன்று வெளியிடுகின்றன.

எப்படிப் பார்த்தாலும், இன்று ஜனாதிபதி ரணில் ஆற்றவிருக்கும் கொள்கை விளக்கவுரையில், நாட்டின் நிலைமைகள் மற்றும் பொருளாதாரத் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தால் ஏற்புடையதாக இருக்கும். அதைவிடுத்து, தேர்தலை நடத்துவதற்குரிய நிதி நிலைமை இல்லை என்றோ, அல்லது அதற்குரிய சூழ்நிலை இல்லை என்றோ ஜனாதிபதி கூற முயற்சித்தால் அது ஜனநாயக விரோதப் போக்காகவே அமையும்.

இதற்கப்பால் தேசிய சுதந்திர தினத்திற்கு முன்பாக, இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை அறிவிப்பதாக கூறிய ரணில், அது தொடர்பில் இன்றைய உரையில் குறிப்பிடத்தக்க வகையில் கூறினால் நன்று. ஆனால், சர்வகட்சி கூட்டங்களை நடத்திய ரணில், இதுவரை அந்த கூட்டங்களில் எந்த முடிவையும் ஆக்கபூர்வமாக எட்டவில்லை. இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசியல் கட்சிகளிடம் கோரியிருந்த ஆலோசனைகளும் ரணிலுக்கு இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. இடையில் மாநாயக்க தேரர்களின் 13ஆவது திருத்த எதிர்ப்பு, பிரச்சினைத் தீர்வுக்கான ரணிலின் வேகத்தைக் குறைத்திருப்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆக, ரணிலின் இன்றைய பாராளுமன்ற உரை இன்னுமொரு சப்பைக்கட்டு கட்டுவதாகவே இருக்குமென கள நிலைமை சொல்கிறது. ஆனால், வீண் சாக்குப்போக்கு காரணங்களை சொல்லிக்கொண்டிராமல், சமாளிப்புக் காரணங்களை முன்வைக்காமல், யதார்த்தமாக, நடைமுறைச் சாத்தியமான வகையில் செயற்பட வேண்டும். இல்லையேல் இன்றைய ஒரு நாள் எதிர்ப்பு, பின்னர் ஒரு நாளில் 'ரணில் கோ கம' ஒன்றை உருவாக்கிவிடும் நிலைமையை ஏற்படுத்திவிடும் என்பதை இப்போதே கூறிவைக்க விரும்புகிறோம்.

# பேருவளையின் பிரபல சமூகசேவகர் காலமானார்

(பேருவளை பீ.எம்.முக்தார்)



பேருவளை மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் மற்றும் மருதானை ஷாதுலியா ஸாவியா ஆகியவற்றின் முன்னாள் தர்மகர்த்தாவும் பிரபல சமூகசேவையாளரும் சமாதான நீதவானுமாகிய அல்ஹாஜ் அப்துல் ஹமீத் தனது 84ஆவது வயதில் நேற்று முன்தினம் (06.02.2023) இரவு காலமானார்.

11 பிள்ளைகளுக்குத் தந்தையான இவர் சிறிது காலம் நோயுற்றிருந்த நிலையிலேயே காலமானார்.

இவர் இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான மஸ்ஜிதுல் அப்ரார் மற்றும் அதனுடன் இணைந்த ஷாதுலியா ஸாவியா ஆகியவற்றின் நிர்மாணப் பணிகளுக்காக தன்னையே அர்ப்பணித்த முன்னாள் சபாநாயகரும் மேற்படி பள்ளிவாசல் ஜமாத் சபைத் தலைவராகப் பதவி வகித்த மர்ஹூம் தேசமான்ய எம்.ஏ.பாக்கீர் மாக்காருடன் தோளோடு தோள் நின்று உழைத்தவராவார். அத்தோடு அல்-பாஸி அரபுக் கல்லூரியின் வளர்ச்சியிலும் முக்கியமான பங்களிப்புச் செய்த மர்ஹூம் அப்துல் ஹமீத் ஹாஜியார், ஷாதுலிய்யா தரீக்காவின் மூத்த இஹ்வான்களிலும் ஒருவராவார்.

ஷாதுலிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் மர்ஹூம் சங்கைக்குரிய கலாநிதி அஷ்ஷெய்கு முஹம்மத் அல்-பாஸி அல்-மக்கி அஷ் ஷாதுலி (ரஹ்மதுல்லாஹி) மற்றும் மர்ஹூம் அஷ்ஷெய்கு அஜ்வாத் அல்-பாஸி அல்-மக்கி அஷ்ஷாதுலி (ரஹ்மதுல்லாஹி) ஆகியோருடன் மிக நெருக்கமாக இருந்து நின்றதோடு ஷாதுலிய்யா தரீக்காவின் வளர்ச்சிக்காக மாபெரும் சேவையாற்றிய ஒருவராவார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று 7ஆம் திகதி மாலை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜனாஸா நல்லடக்கத்தில் சங்கைமிகு சாதாத்மார்கள், உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் மற்றும் பெருமளவிலான பொதுமக்கள் கலந்துகொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உட்பட்ட அரசியல் பிரமுகர்கள் இவரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

# அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மக்களின் நலன்களுக்கானதாக இருக்கவேண்டும்!



கலாநிதி ஜெகான் பெரேரா



இலங்கை காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்டு பெற்ற சுதந்திரத்தின் 75ஆவது வருட நிறைவை அரசாங்கம் பலத்த பாதுகாப்பின் கீழ் கொண்டாடியது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த கொண்டாட்ட நிகழ்வில் ஒரு உரையை நிகழ்த்தவில்லை. தயாரிக்கப்பட்ட உரை சிறப்பானதாக இருந்தது. ஆனால், அது பின்னரே விநியோகிக்கப்பட்டது. இராணுவ அணிவகுப்பு நடைபெற்ற கொழும்பு காலிமுகத்திடலில் பொதுமக்களின் பங்கேற்பு தவிர்க்கப்பட்டமை சுதந்திர தின நிகழ்வில் அவதானிக்கக்கூடியதாக இருந்த இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

வழமையான சூழ்நிலைகளில், சுதந்திர தினக் கொண்டாட்டங்களின்போது காலிமுகத் திடலில் கரையோரக் காற்றையும் விரிந்து பரந்த பசுமையான மைதானத்தையும் ரசிக்க மக்கள் கூட்டம் நிரம்பிவழியும். மக்கள் பங்கேற்க அனுமதிக்கப்பட்டிருந்தால் கண்கவரும் இராணுவ அணிவகுப்பையும் விமானப்படையின் சாகசங்களையும் கண்டு ரசிக்க அவர்கள் தவறியிருக்கமாட்டார்கள். ஆனால், பாதுகாப்பின்மை உணர்வுடன் இருக்கும் அரசாங்கம் நிலைவரத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்பியது என்பது தெளிவாக தெரிந்தது. அதனால் பெருமளவில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

மக்கள் அனுமதிக்கப்பட்டிருந்தால் அவர்களில் சிலர் ஆர்ப்பாட்டத்தில் இறங்கக்கூடும் என்று அரசாங்கம் அஞ்சிய காரணத்தினாலேயே பொதுமக்கள் அனுமதிக்கப்படவில்லை. முதல்நாள் இரவு பெரும்பாலும் இளைஞர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு சத்தியாக்கிரகத்தை தண்ணீர்ப் பீரங்கி தாக்குதல் நடத்தி பலவந்தமாக கலைத்தனர். நாட்டு மக்கள் கொண்டாடுவதற்கு பெரிதாக எதுவும் இல்லாத ஒரு நேரத்தில் சுதந்திர தின நிகழ்வுக்காக பெருமளவு நிதி வீணாக ஒதுக்கப்பட்டதை ஆட்சேபித்தே இளைஞர்கள் அந்த சத்தியாக்கிரகத்தை முன்னெடுத்தனர்.

பெருமளவு பாதுகாப்புப் படையின் பிரசன்னம் இருந்தபோதிலும், அமைதியான முறையில் போராட்டத்தைச் செய்தவர்கள் குண்டர் குழுவொன்றின் தாக்குதலுக்கு இலக்காகினர். சத்தியாக்கிரகிகள் பொலிஸாரின் நடவடிக்கையை எதிர்த்து நின்றபோது அவர்கள் தாக்கப்பட்டு விரட்டப்பட்டதுடன், கைதுசெய்யப்பட்டனர். எந்தவித குழப்பமுமின்றி சுதந்திர தின கொண்டாட்டங்களை நடத்துவதில் அரசாங்கம் குறியாக இருந்ததே தவிர மக்களின் மனங்களை வென்றெடுப்பதில் அக்கறை காட்டவில்லை.

கொண்டாட்ட அரங்கில் பொதுமக்களின் பங்கேற்பு இல்லாமல் வீதியெங்கும் பொலிஸாரும் படையினரும் பெருமளவில் குவிக்கப்பட்டு சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட விதம் கடந்த தசாப்தங்களில் நாடு முகங்கொடுத்த போர்க் காலத்தை நினைவுபடுத்தியது. அந்த நாட்களில் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் கடுமையான பாதுகாப்பின் கீழ் இடம்பெற்ற அதேவேளை, விடுதலை புலிகள் குண்டுத்தாக்குதல்களை நடத்தக்கூடும் என்ற அச்சத்தில் மக்கள் வீடுகளில் பாதுகாப்பாக இருப்பதையே விரும்பினார்கள்.

மக்களின் வாழ்வில் பெரும் அவலங்களை ஏற்படுத்தியிருக்கும் தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு பல வருட காலப்போர் பெருமளவில் காரணமாக இருந்ததால் அந்த கடந்த காலத்தை மீட்டுப்பார்ப்பது இன்று பொருத்தமானதேயாகும். சனத்தொகையில் 70 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் தாங்கள் உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைத்திருப்பதுடன், 40 சதவீதமானவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இனநெருக்கடிக்கும் பொருளாதார அபிவிருத்தியின்மைக்கும் இடையிலான தொடர்பை ஏற்றுக்கொண்டவராக ஜனாதிபதி விக்கிரமசிங்க இனநெருக்கடிக்கு தாமதமின்றி அரசியல் தீர்வொன்றைக் காணும் முயற்சிகளுக்கு முன்னுரிமையைக் கொடுத்திருக்கிறார்.

### மக்களின் கோபம்

சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தலைநகர் கொழும்பில் மாத்திரம் தான் இடம்பெற்றன என்றில்லை. நாட்டின் ஏனைய பகுதிகளிலும் குறிப்பாக வடக்கிலும் இடம்பெற்றன. பிரதான தமிழ்க் கட்சியும் சிறிய கட்சிகளும் சுதந்திர தின நிகழ்வுகளைப் பகிஷ்கரிக்குமாறு அழைப்பு விடுத்து அவற்றில் பங்கேற்கவில்லை. யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் ஹர்த்தாலைப் பிரகடனம் செய்து கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டனர். ஆனால், பெரும்பாலான மக்கள் சுதந்திர தினக் கொண்டாட்டங்களிலோ அல்லது அதற்கு எதிரான போராட்டங்களிலோ அக்கறை காட்டவில்லை.

தன்னியல்பான முறையில் மக்கள் தேசியக்கொடிகளைப் பறக்கவிடவும் இல்லை. அரசாங்கமும் அவ்வாறு செய்யுமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுக்கவுமில்லை. அரசாங்கம் ஏதோ தனக்காக சுதந்திர தினத்தைக் கொண்டாடியது போன்று தோன்றியது. பொலிஸாரின் பாதுகாப்புடன் பளபளக்கும் வாகனங்களில் வந்திறங்கிய ஆளுநர்களும் அமைச்சர்களும் ஏனைய விருந்தினர்களும் காலிமுகத்திடல் சுதந்திர தினக் கொண்டாட்ட அரங்கில் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த பந்தல்களில் அமர்ந்ததை தேசிய தொலைக்காட்சிகள் காட்டின. ஆனால், தங்களது தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன்னால் இருந்து அவற்றைப் பார்த்த மக்கள் ஆடம்பர வாகன வரிசைகளைக் கண்டு ஆத்திரமடைந்திருப்பார்கள்.

ஒரு வருடத்துக்கும் குறைவான காலத்துக்கு முன்னர், தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வங்குரோத்துநிலை பிரகடனம் செய்யப்பட்டதையடுத்து, வீதிக்கிறங்கி மக்கள் செய்த கிளர்ச்சிக்கு மத்தியில் இதே அரசியல் தலைவர்கள் பதுங்கியிருந்தார்கள். பொதுப் போராட்டங்களில் ஒருபோதுமே பங்கேற்காத மக்களும் வீதிகளுக்கு இறங்கியதைக் காணக்கூடியதாக இருந்தது. நாட்டின் செல்வத்தைச் சூறையாடி தங்களை பிச்சைக்காரர்களாக்கி விட்ட அரசாங்கத் தலைவர்கள் வெளியேறவேண்டுமென்று கோருவதற்கு குழந்தைகளுடன் தாய்மார், வயோதிபர்கள், உடல் ஊனமுற்றவர்கள் என்று சமூகத்தின் பல பிரிவினரும் தொலைதூர இடங்களில் இருந்தும் போராட்டக்களங்களுக்கு திரண்டு வந்தார்கள்.

அதே மக்கள் தாங்கள் அன்றாட வாழ்க்கையை ஓட்டுவதற்கே திணறிக்கொண்டிருக்கும்போது அதே அரசியல்வாதிகள் ஆடம்பர வாகனங்களில் வந்து சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதை தொலைக்காட்சிகளில் பார்த்து கொதிப்படைந்திருப்பார்கள். ஊழலையும் அதிகார துஷ்பிரயோகத்தையும் செய்துவிட்டு அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தண்டனை எதுவுமின்றி சுதந்திரமாக ஆடம்பர வாழ்க்கையை நடத்தும் போக்கிற்கு முடிவு கட்ட வேண்டும் என்றே அரசாங்கத்தை மக்கள் கோருகிறார்கள். ஆனால், அதை அரசாங்கம் செய்யத் தயங்குகிறது போல் தெரிகிறது.

இத்தகைய பின்புலத்தில் சுதந்திர தினம் இந்த வகையாக யாருக்காகக் கொண்டாடப்படுகிறது என்ற கேள்வி எழுகிறது. பொருளாதாரம் படுமோசமாக வீழ்ச்சியடைந்திருக்கும் நிலைவரத்துக்கு மத்தியில் கற்பனை செய்து பார்த்திருக்க முடியாத முறையில் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டிருக்கிறது. நிகழ்வுக்கான செலவு தொடர்பில் மக்களின் ஆட்சேபத்தை கருத்தில் எடுக்க அரசாங்கம் முயற்சித்து இராணுவ அணிவகுப்பின் அளவைக் குறைத்தது. வாழ்வின் அழகியல் பக்கத்தைப் பிரதிபலிக்கும் கலாசார அணிவகுப்புக்களும் நிறுத்தப்பட்டன.

சுதந்திர தினம் வேறுபட்ட முறையில் அதாவது அரசியல் தலைவர்களுக்காகவோ சர்வதேச சமூகத்துக்காகவோ அன்றி மக்களுக்காக கொண்டாடப்பட்டிருக்கவேண்டும். இந்த நிகழ்வு பெருமளவுக்கு சர்வதேச கவனத்தைப் பெறவில்லை. எம்மை உலகம் பார்க்கின்ற முறையை அது மாற்றவில்லை. அது இலங்கை மக்களின் இதயங்களையும் தொடவில்லை. சுதந்திர தினக் கொண்டாட்டங்களை தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டு அவர்கள் நிச்சயமாக தங்களது நலன்களுக்கு உதவாத அந்த செலவினங்களைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்திருப்பார்கள்.

### துணிச்சலான உறுதிமொழிகள்

சுதந்திர தினக் கொண்டாட்டத்தை வேறுபட்ட முறையில் நடத்தியிருக்கமுடியும். மக்களின் வாழ்வைப் பாழ்படுத்தியிருக்கும் வறுமையை அரசாங்கம் உணர்ந்து நடந்துகொண்டிருக்க முடியும். மக்கள் மீது அக்கறை காட்டும் பண்புகளை வெளிக்காட்டக்கூடிய முறையில் சுதந்திர தின நிகழ்வை அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கமுடியும். நாடு பூராவும் இருந்து சகல இனங்களையும் மதங்களையும் சாதிகளையும் சேர்ந்த வறிய குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பாடசாலை சிறார்களை அழைத்துவந்து பாடசாலைப் புத்தகங்களையும் சீருடைகளையும் ஒரு அடையாளபூர்வமாக அன்பளிப்புச் செய்து நாட்டின் சிறுவர்களில் முதலீடு செய்வதில் அரசாங்கத்துக்கு இருக்கும் கடப்பாட்டை வெளிக்காட்டியிருக்கலாம்.

இது அரசாங்கம் தவறவிட்ட - அதற்குப் பெரும் பாதகமாக அமையக்கூடிய ஒரு சந்தர்ப்பமாகும். எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இதன் தாக்கத்தை உணரக்கூடியதாக இருக்கும். 2048ஆம் ஆண்டில் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க கொண்டிருக்கும் திட்டம் அன்றாட வாழ்க்கையைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின் கவனத்தைப் பெறவில்லை.

''ஒரு தாயின் பிள்ளைகள் போன்று ஐக்கியப்படுவதற்கு எங்களை நாம் அர்ப்பணிப்போம். சுதந்திரத்தின் நூற்றாண்டைக் கொண்டாடப்போகும் 2048ஆம் ஆண்டளவில் உலகின் மிகவும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஒன்றாக இலங்கையை மாற்றுவதற்கு எம்மை அர்ப்பணிப்போம்" என்று தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் முன்னுரிமை கொடுக்கின்ற விவகாரங்கள் குறித்து கண்டன விமர்சனங்கள் இருக்கின்ற போதிலும், தேசியநலன்களுக்கு உகந்த முறையில் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஜனாதிபதி வெற்றி காண்பார் என்று தொடர்ந்து நம்பிக்கை வைப்பவர்களும் இருக்கிறார்கள். ஜனாதிபதியின் துணிச்சலான சூளுரைகளில் ஒன்று மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்த இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வைக் கண்டு 75ஆவது சுதந்திர தினத்தில் தேசிய நல்லிணக்கத்தை எட்டி ஒரு தாய் மக்கள் போன்று ஐக்கியப்படுவதாகும்.

இந்தப் பணி தொடர்பில் மூன்று மாதங்களுக்கு முன்னர் அவர் முதலில் தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியபோது சுதந்திர தினத்துக்கு முன்னதாகக்கூட அந்தப் பணி நிறைவேற்றப்பட்டுவிடக்கூடும் என்று ஒருவகை எதிர்பார்ப்பு இருந்தது. பணி நிறைவேற்றம் குறித்து சுதந்திர தின சுபவேளையிலேயே அறிவிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவ்வாறு அமையவில்லை. முதல் அடி கூட இன்னும் எடுத்துவைக்கப்படவில்லை என்றே தோன்றுகிறது. பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்து பெப்ரவரி 8இல் (இன்று) ஜனாதிபதி நிகழ்த்தவிருக்கும் கொள்கைவிளக்க உரை மீது இப்போது கவனம் திரும்பியிருக்கிறது.

இன அடிப்படையில் பிளவுபட்ட சமுதாயம் ஒன்றில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதென்பது எளிதான காரியமல்ல. பல துறைகளையும் சேர்ந்த பல பிரிவினரின் ஆதரவு அதற்கு தேவை. இது தொடர்பில் ஜனாதிபதியின் உறுதிப்பாட்டின் அறிகுறி சுதந்திர தின நிகழ்வில் சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் தேசியகீதம் இசைக்கப்பட்டதன் மூலம் வெளிப்பட்டது. நான்கு வருட இடைவெளிக்குப் பிறகு இவ்வாறு நடைபெற்றிருக்கிறது. கடந்த காலப் பிளவுகளை வெற்றிகொள்வதில் ஜனாதிபதிக்கு இருக்கும் உறுதிப்பாட்டை இது பிரதிபலிக்கிறது.

பல தசாப்தங்களுக்குப் பிறகு சுதந்திர தினத்தன்று தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த 2015 - 2019 காலப்பகுதியில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. சிவில் சமூகத்திடமிருந்து ஆதரவை வேண்டிநிற்கும் அம்சங்கள் ஜனாதிபதியிடமும் அரசாங்கத்திடமும் இருக்கின்றன. கடந்த காலத் தவறுகளின் மரபை நாம் வெற்றிகொண்டு படிப்பினைகளைப் பெற்று தவறுகள் மீண்டும் இழைக்கப்படாத ஓர் எதிர்காலத்தை நோக்கி நாம் பயணத்தை தொடங்கவேண்டியது அவசியமாகும்.

## இன்றைய நாளில்..

- 1924 – ஐக்கிய அமெரிக்காவில் மரண தண்டனைகளுக்கு முதல் தடவையாக நச்சு வாயுவைப் பயன்படுத்தும் முறை நெவாடாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1956 – இலங்கையில் 'சிங்களம் மட்டும்' சட்டம் களனி மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.
- 1960 – இரண்டாம் எலிசபெத் மகாராணி விடுத்த அறிவிப்பு ஒன்றில், அவரும் அவரது குடும்பமும் வின்சர் மாளிகை என அழைக்கப்படுவர் எனவும், அவரது வழித்தோன்றல்கள் மவுண்ட்பேட்டன் - வின்சர் என அழைக்கப்படுவர் எனவும் தெரிவித்தார்.
- 1974 – 84 நாட்கள் விண்ணில் பயணம் செய்த பின்னர் முதலாவது அமெரிக்க விண்வெளி ஆய்வுகூடமான ஸ்கைலாப்-4 இன் வீரர்கள் பூமிக்குத் திரும்பினர்.
- 2005 – ஈழப் போர்: முதல் நாள் இடம்பெற்ற தாக்குதலில் படுகாயமடைந்த இலங்கைத் தமிழ் அரசியல்வாதி அரியநாயகம் சந்திரநேரு மருத்துவமனையில் உயிரிழந்தார்.

## நக்கல் நமசிவாயம்

தேர்தல் மட்டும் ஒத்திப்போடப்பட்டதெண்டு வையுங்கோ.. இந்த லீவு எடுத்து எலெக்ஷனிலே நிக்க துணிஞ்சு லீவு போட்ட அரசாங்க ஊழியர்கள், வீடுகளில இருந்த மாதிரித்தான்.. மனுசிக்காரி பிரசாரக் கூட்டம் நடத்துவா..!



# பொதுவுடமை இலட்சியத்துக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்த சண்முகதாசன்



**(காலஞ்சென்ற கம்யூனிஸ்ட் தலைவர் என். சண்முகதாசனின் மறைவையடுத்து 1993 முற்பகுதியில் லண்டனில் இனமும் வர்க்கமும் (Race and Class) சஞ்சிகையின் ஆசிரியர் ஏ.சிவானந்தன் எழுதிய அஞ்சலிக் குறிப்பு இன்று அவரது 30ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு மீள்பிரசுரம் செய்யப்படுகிறது.)**



மூன்றாம் உலக நாடு ஒவ்வொன்றிலும் புரட்சி செய்வதில் வெற்றிபெறாத ஒரு பிடெல் காஸ்ட்ரோவோ, அமில்கார் கப்ராலோ அல்லது என்குயென் கியாப்போ இருக்கவே செய்கிறார்கள். ஆனால், அவர்கள் அநீதிக்கும் சகிப்புத்தன்மையின்மைக்கும் அசமத்துவத்துக்கும் எதிரான தங்களது போராட்டத்தில் புரட்சிவாதிக்குரிய பண்புகளையும் நேர்மையுடனான ஒழுக்கமுறையையும் அர்ப்பணிப்பு உணர்வையும் உருவகப்படுத்தி நிற்பதன் மூலமாக சோஷலிசத்தின் விதைகளை ஆழமாக வேரூன்றச் செய்திருக்கிறார்கள். சண்முகதாசன் அத்தகைய ஒரு மனிதரே.

அவரைப் பொறுத்தவரை, சோஷலிசத்தை அடைவதற்கு குறுக்குவழி கிடையாது. பாராளுமன்றப் பாதையும் அதற்குக் கிடையாது. இலக்குகளுக்கும் வழிமுறைகளுக்கும் இடையே விட்டுக்கொடுப்பும் இருக்கமுடியாது. அதனால் அவரால் ஒருபோதும் அதிகாரத்தை எட்டமுடியவில்லை. ஒரு தடவை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோதிலும் கூட பாராளுமன்ற உறுப்பினராகவும் அவரால் வரமுடியவில்லை.

சண் தனது அரசியல் போக்கை ஜனரஞ்சக அரசியலாக ஒருபோதும் தாழ்த்திக்கொண்டதுமில்லை. அவ்வாறிருந்தாலும் அவர் ஒரு மக்களின் தலைவன். தொழிலாளர் வர்க்கத்தின் சேவகன்.

1939ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தில் மார்க்சியத்தை அறிந்துகொண்ட தருணம் முதல் மரணமடையும் வரை சண், பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் வர்க்கங்கள் இல்லாத சமூகத்தை அடையும் வேட்கைக்குமான இலட்சியத்துக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

முதலில் லெனினையும் சோவியத் கம்யூனிசத்தையும் பின்பற்றிய சண், 1963ஆம் ஆண்டுக்குப் பிறகு வழிகாட்டலுக்காக மாவோ சேதுங்கின் சீனா நோக்கித் திரும்பினார். அந்தப் பயணத்தில் அவர் தொழிற்சங்கவாதியாக, தத்துவார்த்தியாக, வாதப்பிரதிவாதம் செய்பவராக, கட்டுரையாளராக, போராளியாக, சேவகனாக விளங்கினார்.

நம்பிக்கையற்றதாக தோன்றிய இலட்சியங்களுக்காக குரல்கொடுப்பதற்கு தயங்காத சண், தனது செயற்பாடுகளின் மூலமாக அந்த இலட்சியங்களை நம்பிக்கைக்குரியவையாக்கினார்.

டி.எஸ்.சேனநாயக்கவின் அரசாங்கம் இந்திய வம்சாவளி தோட்டத்தொழிலாளர்களின் குடியுரிமையயும் வாக்குரிமையையும் பறித்ததையடுத்து அந்த மக்கள் இடதுசாரி அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரை தேர்தல் நோக்கங்களுக்காக தீண்டத்தகாதவர்களானார்கள். ஆனால், செங்கொடி சங்கத்தின் மூலமாக தோட்டத்தொழிலாளர்களின் இலட்சியங்களுக்காக குரல் கொடுத்த சண், அவர்களுக்கு போராட்ட உணர்வை ஊட்டினார்.

இந்து சமுதாயம் அதன் வெறித்தனமான சாதி அடக்குமுறைக் கட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கோவில் கதவுகளை மாத்திரமல்ல, பொது இடங்களின் கதவுகளையும் மூடியபோது உயர்சாதி இந்து குடும்பத்தைச் சேர்ந்தவரான சண், பிராமணர்களின் மாடங்களுக்குள் அந்த மக்களை வழிநடத்திச்சென்று மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டினார்.

பாரம்பரிய அர்த்தத்தில் சண் ஒரு குரு. முன்னுதாரணத்தாலும் போதனையாலும் அவர் ஓர் ஆசிரியர். பொதுவாழ்க்கையிலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் ஓர் உதாரண புருசர். இலங்கையின் அரசியல் சமுதாயம் முற்றுமுழுதாக ஊழல்தனமானதாக மாறியிருந்த ஒரு நேரத்தில் பணத்துக்கு விலைபோகும் குணத்தினாலோ அல்லது அதிகார மோகத்தினாலோ தீண்டப்பட முடியாதவராக சண் விளங்கினார்.

இலங்கையில் புத்திஜீவித்துவ வாழ்வு கீழ்த்தரமானதாகவும் அருவருக்கத்தக்கதாகவும் மாறியிருந்த ஒரு நேரத்தில் சண் இருண்ட உலகின் ஒரு தீபம் போன்று தனது புத்திஜீவித்துவ நேர்மையை வெளிக்காட்டினார். இலங்கை மிகவும் கொடூரமான இனவாத வன்முறைக்குள் மூழ்கிக்கிடந்த ஒரு நேரத்தில் சண், சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏகோபித்த நீதி வேண்டிக் குரல்கொடுத்தார்.

மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் அவர் கண்ட வேறுபாடு ஒரு கோட்பாட்டு அடிப்படையிலான நவீனத்துவம் அல்ல, மாறாக ஆழமான ஒரு மெய்யுணர்வாகும். மற்றெவரையும் விட முன்கூட்டியே நிலைவரங்களைப் புரிந்து விளங்கிக்கொள்ளக்கூடிய சிறப்புவாய்ந்த இயங்கியல் சிந்தனையாற்றலை கொண்டிருந்த சண், தான் தலைமை தாங்கிய மக்களை விடவும் முன்கூட்டியே விடயங்களை தெரிந்துகொள்கிற ஓர் அரசியல் இயல்புணர்ச்சியைக் கொண்டவராகவும் விளங்கினார். ஓர் அர்த்தத்தில் நோக்கும்போது சண் தனது காலத்துக்கு முந்தியவர் மாத்திரமல்ல, ஆழ்கடலின் நடுவில் தெரியும் மலைக்குன்றைப் போன்றவர்.

---




**01. கருத்திட்ட அலுவலகங்கள் மற்றும் கருத் திட்ட முகாமைத்துவ அலகுகள் போன்றவற்றை மீளாய்வு செய்தல் குழுவின் அறிக்கை**

பல்வேறு நோக்கங்களுக்காக நிறுவப்பட்டுள்ள கருத்திட்ட அலுவலகங்கள் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளுக்கு குறிப்பிடத்தக்களவு செலவினங்கள் செய்யப்படுவதாலும், குறித்த அலுவலகங்கள் மற்றும் அலகுகளுக்கு குறிப்பிடத்தக்களவு பணிக்குழாமினர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமையைக் கருத்திற்கொண்டும் அவற்றின் பணிகளை மீளாய்வு செய்யவேண்டுமென 2022ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றும்போது ஜனாதிபதியால் முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த கருத்திட்ட அலுவலகங்கள் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதையும், அவற்றைத் தொடர்ந்து நடத்திச் செல்லப்பட வேண்டுமா என்பதையும் மீளாய்வுசெய்து பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக முன்னாள் அமைச்சின் செயலாளர் எச்.ரீ.கமல் பத்மசிறி தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழுவானது தற்போது நடத்திச் செல்லப்படும் 55 கருத்திட்ட அலகுகளை முடிவுறுத்துவதற்கும், மேலும் 32 முகாமைத்துவ அலகுகளை இடைநிறுத்துவதற்கும், 46 கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளை குறைந்தபட்ச பணிக்குழாமினருடன் நடத்திச் செல்வதற்கும் பொருத்தமெனப் பரிந்துரை செய்துள்ளது.

அதற்கமைய, குழுவின் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இலங்கை தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் 'அடிப்படை ஆண்டு மதிப்பை' இற்றைப்படுத்தல்**

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண், மொத்தத் தேசிய உற்பத்தியின் பணவாட்டக் காரணி முக்கிய அளவுகோலாக அமைவதுடன், அது நாட்டின் ஒட்டுமொத்த பணவீக்க சதவீதம் தொடர்பான பரவலான அளவுகோலாக அமைவதுடன், அதன் முதலாவது தரவுத் தொகுதி மதிப்பீட்டு ஆண்டு 2013 ஆகும். இலங்கையில் வீட்டு அலகுகளின் சமகால நுகர்வுச் செலவினங்களின் எடுத்துக்காட்டுகளாக பண்டங்கள் மற்றும் சேவைகள் பொதியில் அடங்குகின்ற வகைகளைப் போலவே பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான ஒப்புமை எடைகள் இற்றைப்படுத்தப்படல் வேண்டும். அதற்கமைய, குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள கீழ்க்காணும் படிமுறைகளை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த படிமுறைகளுக்காக அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

அடிப்படை ஆண்டு 2013 = 100 ஆகவிருந்த தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படை ஆண்டு 2021 = 100 ஆக இற்றைப்படுத்தல்.

2023 ஜனவரி மாதம் தொடக்கம் 21 நாட்கள் காலப்பகுதியுடன் கூடிய நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் தேசிய மட்டத்திலான பணவீக்க சதவீதத்தை மாதாந்தம் தயாரித்து வெளியிடுதல்.

இற்றைப்படுத்தப்பட்ட தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுக்கு 2019ஆம் ஆண்டில் நுகர்வோர் செலவினங்களை அடிப்படையாகக்கொண்டு ஒப்புமை எடையை மேற்கொள்ளல்.

2023 ஜனவரி மாதம் தொடக்கம் கொழும்பு மாவட்ட நகர்ப்புறப் பிரதேசங்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்படும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 2021- 100 எனும் புதிய 'அடிப்படை ஆண்டு மதிப்பை' இற்றைப்படுத்தி கொழும்பு நகரப் பிரதேசங்களுக்கான பணவீக்க சதவீதத்தைத் தயாரித்து வெளியிடல்.

**03. சவூதி அரேபிய இராச்சியத்தின் தக்காமோல் கம்பனி மற்றும் இலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவுக்கும் இடையிலான திறன்களைச் சான்றுப்படுத்தும் வேலைத்திட்டத்திற்கான ஒப்பந்தம்**

கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்ற மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் குறித்த தரப்பினர்களின் ஒருங்கிணைப்புடன் வெளிநாடுகளில் திறன்களை சான்றுப்படுத்தும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி இலங்கை திறன்சார் உழைப்புப் படையின் தகைமைகளை வெளிநாடுகளுடன் ஒப்புமைப்படுத்தும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதன்மூலம், எமது நாட்டின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உயர் பெறுமதியுடனும், கண்ணியத்துடனும் மற்றும் அதிக பொருளாதார நன்மைகளுடனும் கூடிய வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தி வழங்க முடியும்.

அதற்கமைய, சவூதி அரேபிய இராச்சியத்தின் மனிதவளங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு மற்றும் மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவுக்கும் இடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும் வெளிவிவகார அமைச்சின் உடன்பாடும் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த ஒப்பந்தத்தில் கைஒப்பமிடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் துருக்கி வானொலி தொலைக்காட்சிக் கூட்டுத்தாப னத்திற்கும் இடையேயான ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்**

2021ஆம் ஆண்டில் இடம்பெற்ற இலங்கை - துருக்கி பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் இரண்டாவது கூட்டத்தொடரில் இருதரப்பினர்களுக்கிடையேயான வர்த்தக, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை மேலும் பலப்படுத்தும் நோக்கில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் துருக்கி வானொலி தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையேயான ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும் வெளிவிவகார அமைச்சின் உடன்பாடும் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு மற்றும் மாலைதீவு குடியரசுக்கும் இடையிலான கலாசார ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்**

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு மற்றும் மாலைதீவு குடியரசுக்கும் இடையிலான கலாசார ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்காக, தயாரிக்கப்பட்டுள்ள ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும் வெளிவிவகார அமைச்சின் உடன்பாடும் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க (கரைகடந்த கம்பனிகளைப் பதிவு செய்தல்) ஒழுங்குவிதிகள்;, 2022.11.17 திகதிய 2306 / 54ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த ஒழுங்குவிதிகளின் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. 1980 ஆம் ஆண்டின 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக் கைப் பொறுப்பு நிதிய சட்டத்திற்கான திருத்தங்களை அறிமுகம் செய்தல்**

அக்ரஹார தேசிய காப்பீட்டு அறக்கட்டளை நிதியத்திற்கு சமமான சுகாதாரக் காப்பீட்டு முறையொன்றை தனியார் துறை ஊழியர்களுக்கும் வழங்குவதற்கான முன்மொழிவொன்று 2023ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்ட உரையில் ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த முன்மொழிவை நடைமுறைப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் 1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டத்தை திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. நலன்புரி அனுகூலங்களைச் செலுத்துகின்ற செயன்முறைக் காக 2002ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டம் மற்றும் 2006ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

2002ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 27ஆம் பிரிவுக்கமைய 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நலன்புரி அனுகூலக் கொடுப்பனவு (கொடுப்பனவுக்கு தகவுடையவர்களைத் தெரிவுசெய்தல்) ஒழுங்குவிதிகள் 2022.10.20ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், 2002ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் கருமங்களையும் பணிகளையும் சரியான வகையிலும் வினைத்திறனுடனும் மேற்கொள்வதற்காக 2006ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் கருமங்ளையும் பணிகளையும் சரியான வகையிலும் வினைத்திறனுடனும் மேற்கொள்வதற்காக இலத்திரனியல் அறிக்கை மற்றும் ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் அதுதொடர்பான தகவல் தொகுதியொன்றைப் பேணிச் செல்வதற்கு இயலுமாகும் வகையில் 2006ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவத் தொகுதி ஒழுங்குவிதிகள் 2022.11.29ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த ஒழுங்குவிதிகளின் பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. 1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் பிரிவுகளை நடைமுறைப்படுத்தும்போது அதிகாரிகளுக்கு ஏற்படுத்தப்படுகின்ற இடையூறுகளுக்கான தண்டனைகளை அதிகரிப்பதற்கும் மற்றும் சட்டவிரோத செயல்களை தடுப்பதற்கான ஒழுங்குபடுத்தல்களுக்கான ஏற்பாடுகள் உள்ளடக்கி குறித்த சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக 2020.12.21 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. பிரிவிடல் வழக்குச் சட்டத்திற்கான திருத்தங்களை அறிமுகப்படுத்தல்**

சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் ஏற்பாடுகளை உள்ளடக்கி பிரிவிடல் வழக்குச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக 2021.10.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. 1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் 2023.01.19ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2023ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க செலுத்தல் முறைகளுகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. நிதி (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்**

அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான நிதியை முறையான வகையில் முகாமைத்துவப்படுத்தும் நோக்கில் சட்டமூலமொன்றை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை 2022ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத்திட்ட யோசனை மூலம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கமைய, அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களால் பேணப்பட்டு வரும் நியதிச்சட்ட நிதியின், முறையான கண்காணிப்பு மற்றும் அவற்றுக்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக சட்டமூல மொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்கு வதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீ காரம் வழங்கியுள்ளது.

**13. மிக நெருக்கடியான நிதி நிலைமையின் கீழ் அத்தியாவசிய அரச சேவைகளைப் பேணிச் செல்லல்**

நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக அரச வருமானம் மொத்தத் தேசிய உற்பத்தியின் 8.3 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்நிலை மையிலிருந்து மீண்டுவரும் வரைக்கும் பொதுச் சேவைகளை பேணிக்கொண்டு செல்வதற்கு அவசியமாக மேற்கொள்ள வேண்டிய மீண்டெழும் செலவினங்களுக்கு மாத்திரம் கட்டுநிதியை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திறைசேரி செயலாளருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**14. முறைசார்ந்த மீளாய்வு மூலம் அரச செலவினங்களை சீரமைத்தல்**

அரச செலவினங்களை சீரமைக்கும் நோக்கில் பூச்சிய நிலை அடிப்படையிலான வரவு-செலவுத்திட்ட முறையை அறிமுகப்படுத்துவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதியால் 2023ஆம் ஆண்டின் வரவு-செலவுத்திட்ட யோசனையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

பூச்சிய நிலை அடிப்படையிலான வரவு- செலவுத்திட்ட முறையின் கீழ் முறைசார்ந்த மீளாய்வு மூலம் செலவிடும் வேலைத்திட்டங்கள் மீண்டும் மீண்டும் இடம்பெறல், வீண்விரயம், குறைந்த முன்னுரிமைகளுடன் கூடிய செயற்பாடுகள் மற்றும் தற்போது நிலவுகின்ற நிதியொதுக்கீட்டுப் பயன்பாட்டுக்கான வினைத்திறனானதும் உற்பத்தித்திறன்மிக்கதுமான முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய, வருடாந்த வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டின் மூலம் அதிக நிதியொதுக்கீடு மேற்கொள்ளப்படும் கீழ்க்காணும் அமைச்சுகள் தொடர்பான முறைசார்ந்த மீளாய்வை மேற்கொள்வதற்காக பிரதி திறைசேரி செயலாளர் அல்லது திறைசேரியின் சிரேஷ்ட அதிகாரியின் தலைமையில் 10 அதிகாரிகள் குழுக்களை நியமிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

கல்வி அமைச்சு

சுகாதார அமைச்சு

விவசாய அமைச்சு

பெருந்தோட்டத்துறை அமைச்சு

பாதுகாப்பு அமைச்சு

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

நீர்ப்பாசன அமைச்சு

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

---


தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.02.06
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5023
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,348,539.00
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 6 8 1 8 9 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3265
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 77,053,503.20
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 15 24 34 56

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1053
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 82,225,956.40
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 30 33 54 57

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 332
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,568,953.20
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 09 21 26 49
விசேட இலக்கினம் கடகம்

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1478
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,213,343.20
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 8 5 8 8 8 5

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1371
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 298,196,318.00
ஆங்கில எழுத்து H
சுப்பர் இலக்கம் 09
வெற்றி இலக்கங்கள் 17 31 35 44
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# இ.தொ.காவின் தேர்தல் பிரசாரம் நுவரெலியா மாவட்டத்தில் ஆரம்பம்



(ஆ. ரமேஸ்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்துக்கான தேர்தல் பிரசாரத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பித்துள்ளது.

இதன்படி நுவரெலியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு போட்டியிடும் வேட்பாளர்களுடனான கலந்துரையாடலும், தேர்தல் பிரசார ஆரம்பக்கூட்டமும் கொட்டகலை சீ.எல்.எப் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளரும், எம்.பியுமான மருதபாண்டி ராமேஸ்வரன், சிரேஷ்ட உறுப்பினர் அனுசியா சிவராஜா, தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல், இ.தொ.காவின் உப தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி செயற்பாட்டாளர்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 12 உள்ளூராட்சி சபைகளில் 7 சபைகளில் யானை சின்னத்திலும், 5 சபைகளில் சேவல் சின்னத்திலும் காங்கிரஸ் போட்டியிடுகின்றது.

# மகாவலி பிரதேசங்களில் மர நடுகைத் திட்டம்



(கண்டி செய்தியாளர்)


மத்திய மாகாண அரச நிறுவனங்களின் பங்களிப்புடன் மகாவலி பாதுகாப்பு வனப் பிரதேசங்களில் மரங்கள் நடும் கூட்டு வேலைத்திட்டம் ஒன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, விக்டோரியா நீர்த்தேக்கத்தை அண்மித்த பிரதேசங்களில் வளர்ந்துள்ள இராட்சத தொட்டாச்சுருங்கி செடிகளை அகற்றி, அதற்கு பதிலாக கும்புக் மற்றும் இழுப்பை மரங்களை நடும் வேலைத்திட்டம் ஒன்று பல்லேகலையிலுள்ள இலங்கை ரைபிள் படைப்பிரிவு வளாகத்திற்கு அருகில் முன்னெடுக்கப்பட்டது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகேயின் மேற்பார்வையில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக மகாவலி ஆற்றுக்கு அருகில் 2000 மரக்கன்றுகள் நடப்படும்.

அத்துடன், பல்லேகலை ரைபிள் படைப்பிரிவு இவற்றை பராமரிக்க முன்வந்துள்ளது. இவ் வேலைத்திட்டம் முழு மகாவலி வனப்பிரதேசங்களிலும் பல கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் என ஆளுநர் காரியாலயம் தெரிவித்தது.

# நாவலப்பிட்டியில் விபத்து ஒருவருக்கு காயம்



(கினிகத்தேனை செய்தியாளர்)

நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு முன்பாக வெள்ளைக்கோட்டின் ஊடாக பாதையை கடந்து சென்றவர் மீது வேன் ஒன்று மோதியதால் காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வீதியில் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் வெள்ளை கோடு ஊடாக பாதையை கடந்து சென்றவர் மீதே வேன் சாரதியின் கவனக்குறைவால் மோதியுள்ளது. இதன் போது கீழே விழுந்த குறித்த நபர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், சம்பவ இடத்திற்கு விரைந்த நாவலப்பிட்டி பொலிஸார் குறித்த வேன் மற்றும் சாரதியின் மீது விசாரணையை முன்னெடுத்ததோடு மேலதிக விசாரணைகளும் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.



சுதந்திர தினத்தை முன்னிட்டு மஸ்கெலியா நகரில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தினை பொலிஸார் மற்றும் பிரதேச சபையினர் இணைந்து மேற்கொண்டனர். (படப்பிடிப்பு: மஸ்கெலியா செய்தியாளர்)

# ஹட்டன் நூலகத்தில் கைபேசி திருட்டு

(கினிகத்தேனை செய்தியாளர்)

ஹட்டன் நூலகத்தில் ஆசிரியர் ஒருவரின் கைபேசியை சூட்சுமமாக திருடிச் சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, குறித்த ஆசிரியர் தனது கடமை நிறைவடைந்த பின் வாசிகசாலையில் பத்திரிகை வாசித்து கொண்டிருந்தபோதே ஆசிரியரின் கைபேசி களவாடப்பட்டுள்ளது.

இவ்வாறு திருடிச் சென்ற கைபேசி தொடர்பான விடயங்கள் வாசிகசாலையில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கெமராவில் பதிவாகியுள்ளன. குறித்த காட்சிப் பதிவை வைத்துக்கொண்டு திருடி சென்றவர் தொடர்பான விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 13ஐ நடைமுறைப்படுத்துவதில் என்ன சிக்கல்? ஆராய யாழ். வந்துள்ள சர்வமதக் குழு




(யாழ். நிருபர்)

13ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதால் ஏற்படும், சாதக பாதகங்களை அறிய பௌத்த துறவிகள் அடங்கிய சர்வமதக் குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

மூன்று பௌத்த பீடங்களைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்கள் உள்ளடக்கிய 20 பௌத்த துறவிகள் அடங்கிய சர்வமதக் குழு யாழ்ப்பாண சர்வமதக் குழுவின் அழைப்பின்பேரில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் மக்களின் நிலைப்பாடு மற்றும் வடக்கு, கிழக்கில் எவ்வகையான தாக்கத்தை செலுத்தும், அதனை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படும் சாதக, பாதக விடயங்கள் தொடர்பில் மதத் தலைவர்கள் சமூகமட்ட பிரதிநிதிகளின் கருத்துகளை அறிவதற்காக குறித்த விஜயம் அமைந்துள்ளதாகவும் குறித்த குழுவினர், யாழ்ப்பாணத்திலுள்ள மதத் தலைவர்கள், சமூக மட்ட பிரதிநிதிகள், வடமாகாண ஆளுநர் மற்றும் வடக்கில் செயற்படும் அரச அதிகாரிகளுடன் சந்திப்பில் ஈடுபடவுள்ளதோடு மதத் தலைவர்களையும் தனித்தனியாக சந்திக்கவுள்ளதாகவும் யாழ்ப்பாண சர்வமதக் குழுவின் இணைப்பாளர் அருட்தந்தை டிக்சன் தெரிவித்தார்.

# துடிப்பு மிக்க இளம் வேட்பாளர்களை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் களமிறக்கியுள்ளோம்

## முன்னாள் முதல்வர் மணிவண்ணன் தெரிவிப்பு



(சாவகச்சேரி நிருபர்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் துடிப்புமிக்க இளம் வேட்பாளர்களை தமிழ் மக்கள் கூட்டணி களமிறக்கியிருப்பதாக கட்சியின் முக்கியஸ்தரும் யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வருமான சட்டத்தரணி மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (06) கொடிகாமம் நட்சத்திரமஹால் மண்டபத்தில் இடம்பெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் கூட்டணி யாழ். மாவட்டத்திலுள்ள 18 உள்ளூராட்சி மன்றங்களிலும் மான் சின்னத்தில் தேர்தலை எதிர்கொள்ளவுள்ளது.

அந்த வகையில் சாவகச்சேரி நகர, பிரதேச சபைகளுக்கான வேட்பாளர் அறிமுக நிகழ்வு இடம்பெற்று இந்தத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என வேட்பாளர்களுக்கு தெளிவூட்டப்பட்டுள்ளது.

எதிரணிகளை வசை பாடும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடக் கூடாது என எமது வேட்பாளர்களிடம் கேட்டுக்கொள்கிறோம். ஆக்கபூர்வமான சபைகளை அமைப்பதற்காக இளமையான துடிப்புமிக்க வேட்பாளர்களை களமிறக்கியுள்ளோம். இவர்கள் பெரும்பாலும் சமூகத்தில் மக்களுக்கு சேவை புரிந்தவர்களாகவே உள்ளனர்.

இந்த துடிப்புமிக்க இளம் வேட்பாளர்களை மக்கள் வெற்றியடையச் செய்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

மார்ச் 9இல் தேர்தல் இடம்பெறும் பட்சத்தில் பல சபைகளில் ஆட்சியமைக்கும் சக்திகளாக உருவெடுப்போம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது – என்றார்.

# மன்னாரில் 180 குடும்பங்களுக்கு 3 மாதங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் நடவடிக்கை ஆரம்பம்












(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்துவரும் 180 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு தொடர்ச்சியாக 3 மாதங்களுக்கு அத்தியாவசிய உலருணவுப்பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (06) மதியம் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வைற்றல் நிறுவனத்தின் நிதி உதவியுடன் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் (மெசிடோ) மன்னார் மாவட்டத்தில் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குள்ளாகி மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுப் பொருட்களை தொடர்ச்சியாக எதிர்வரும் 3 மாதங்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், விசேட தேவைக்குரிய குடும்பங்கள் மற்றும் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட அடிப்படை சட்ட உதவி தேவையுடைய குடும்பங்கள் உள்ளடக்கப்பட்டு குறித்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

முதல் கட்டப் பணிகள் நேற்று முன்தினம் (06) முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள புதுக்குடியிருப்பு, சவேரியார் புரம், காயாக்குளி, கரடிக்குளி, முள்ளிக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 33 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. தொடர்ச்சியாக ஏனைய குடும்பங்களுக்கு வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறு ஏற்றுமதிப் பொருட்களால் கடந்த வருடம் இலங்கைக்கு ரூ.16 ஆயிரம் கோடி வருமானம்

## விவசாயத் திணைக்களப் பணிப்பாளர்

(கண்டி நிருபர்)

சிறு ஏற்றுமதிப் பொருட்களால் கடந்த வருடம் இலங்கைக்கு மொத்தம் 16 ஆயிரம் கோடி ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களத்தின் அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் கலாநிதி ஜனக்க லிந்தர தெரிவித்தார்.

பேராதனை, கெட்டம்பேயில் வைத்து அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

455.73 மில்லியன் அமெரிக்க டொலர் 2022ஆம் ஆண்டு ஈட்டப்பட்டதாகவும் அது 16 ஆயிரம் கோடி ரூபாவிற்கும் அதிகமாகும் என்றும் தெரிவித்தார்.

50 வருட வரலாற்றின் அதிகூடிய வருமானம் கடந்த 2021ஆம் ஆண்டு ஈட்டப்பட்ட 19 ஆயிரம் கோடி ரூபா என்று தெரிவித்தார்.

இதுவே சிறு ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் ஈட்டப்பட்ட அதிகூடிய ஏற்றுமதி வருமானம் எனவும் தெரிவித்தார்.

பொருளாதாரத்தில் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில், இது பாரிய ஆறுதல் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



கடந்த வருடம் கறுவாப்பட்டை மற்றும் உலர்ந்த கறுவா இலை என்பன மொத்தம் 1860 மெற்றிக் தொன் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் இலங்கை கறுவாவிற்கு சர்வதேச ரீதியில் கூடுதல் கேள்வி ஏற்பட்டுள்ளதாகவும், அதேபோல் மிளகு 11 ஆயிரத்து 415 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கராம்பு 1856 மெற்றிக் தொன்னும் ஏலம் 2.14 மெற்றிக் தொன்னும் சாதிக்காய் 1978 மெற்றிக் தொன்னும் இன்னும் பல சிறு ஏற்றுமதிகள் மூலம் மேற்படி வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, 2023ஆம் ஆண்டு 600 மில்லியன் டொலர் வருமானம் சிறு ஏற்றுமதிகள் மூலம் ஈட்ட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# இராணுவச் சிப்பாய் தூக்கிட்டுத் தற்கொலை

(கெலும் குணதிலக்க)

குடாஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெலுல்ல, காலனியைச் சேர்ந்த இராணுவ சிப்பாய் ஒருவர் தனது வீட்டின் அறையில் நேற்று முன்தினம் (06) தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதாக குடாஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

ஆர்.எம்.குமாரசிறி என்ற 38 வயதுடைய திருமணமான நபரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் மரணம் தொடர்பான பிரேத பரிசோதனை நேற்று (07) எம்பிலிபிட்டிய ஆதார வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டது.

குடாஓயா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பேராசிரியர் எஸ்.டி.எம்.ரியாஸ் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

# Job Vacancies

### Art Teacher

**Institution: Daybridge International School, Dehiwala**
**Walk in Interviews from February 9th 2023**
*Email: daybridge12@yahoo.com*

### Sales Executives

**Company: Pasindu Associates, Boralesgamuwa**
*Email: red@pasinduassociates.lk*

### Content Writer / Communication Officer

**Company: Ecpat, Colombo**
*Email: ecpatlk@gmail.com*

### Programme Coordinator

**Institution: IUCN Sri Lanka**
*Web: www.iucn.org*

### Cost Controller

**Company: Sugar, Colombo**
*Email: hr@sugarcolombo.com*

### Senior Accountant

**Company: Genesiis Software PVT Ltd.**
*Email: hr@genesiis.com*

### Receptionist

**Institution: Ceylon Steel Corporation Ltd**
*Email: vacancies@ceylonsteel.com*

### Sales Representatives

**Company: Farms Pride PVT Ltd**
*Email: hrm@crysbro.net*

### Management Trainee

**Company: Bridges Worldwide PVT Ltd**
**Address: 66 Vivekananda Hill. Colombo 13**
*Email: email@thelastmile.lk*

### Cost Accountant

**Company: J & R Accounting Group LLC**
**Qualifications: BSc degree in Accounting of Finance, Computer Literacy, Strong time management skills with an attention to detail**
*Email: ep@jracct.com*

### Chief Operating Officer

**Company: Shipex Lanka Holdings Pvt Ltd**
**Qualifications: Minimum 05 years of experience, Age between 30-45 years, A completed HND of Degree in Management or in another relevant field, Excellent communication skills.**
*Apply: md@shipexlanka.com*

# ராஜித சேனாரத்னவுக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவிருந்த ஆவணம் மாயம்

## இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு தெரிவிப்பு

முன்னாள் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவிருந்த ஆவணங்களில் ஒன்று காணாமல் போயுள்ளதாக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



பிரதிவாதிகளுக்கு எதிராக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு சமர்ப்பித்த திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகை தொடர்பான வழக்கு விசாரணை நடவடிக்கைக்காக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் நேற்று முன்தினம் (06) அழைக்கப்பட்டபோதே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

மோதர மீன்பிடித் துறை முகத்தை தனியார் நிறுவனத்திற்கு குறைந்த விலைக்கு குத்தகைக்கு வழங்கியதன் மூலம் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுத்தியதாக முன்னாள் அமைச்சர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்கின் முறைப்பாட்டில் ஆதார ஆவணமாக குறிப்பிடப்பட்ட கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் 2014ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதியிடப்பட்ட பணிப்பாளர் சபையின் பத்திரம் காணாமல்போயுள்ளதாக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

# தேர்தலைப் பிற்போடும் வாய்ப்புகள் இல்லை

## பெவ்ரல் அமைப்பு நம்பிக்கை

(பலாங்கொடை மேலதிக நிருபர்)



நடைபெற ஏற்பாடாகியுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போடும் சாத்தியக்கூறுகள் தற்போதைய சூழ்நிலையில் மிகவும் குறைவாகவே காணப்படுவதாக பெவ்ரல் தேர்தல் கண்காணிப்புக் குழு பணிப்பாளர் றோஹன ஹெட்டியாராச்சி தெரிவிக்கிறார்.

இரத்தினபுரி தேர்தல் திணைக்கள உதவித் தேர்தல் ஆணையாளர் சுரங்க அம்பகஹதென்ன மற்றும் அதிகாரிகளுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குத் தகவல் வழங்கயிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயமாக தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

தேர்தல் பிற்போடப்படலாம் என்ற சந்தேகம் பரவலாக இருந்து வருகிறது. வேட்புமனுத் தாக்கல் செய்த பின்பும் இதற்கான வாய்ப்பு இருப்பதாக பொதுமக்கள், அரசியல் தரப்புகள் உட்பட பரவலான சந்தேகம் நிறுவுகிறது. ஆனால், தற்போதைய சூழ்நிலையில் இதற்கான வாய்ப்பு மிகவும் அரிதாகவே காணப்படுகிறது.

தேர்தலை பிற்போடுவதற்கு இரண்டு சட்டரீதியான காரணங்கள் காணப் படுகின்றன. நீதிமன்ற உத்தரவின் மூலமும் பாராளுமன்ற பிரேரணை ஒன்றின் மூலமும் மாத்திரமே தேர்தலை பிற்போடலாம்.

நீதிமன்றத்தில் இத்தேர்தல் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. இலங்கை தேர்தல் வரலாற்றில் மக்களது ஜனநாயக உரிமைகளை பாதிக்கும் வகையில் எச்சந்தர்ப்பத்திலும் தீர்ப்புகள் வழங்கப்படவில்லை. இதற்கு முதல் வழங்கப்பட்ட இரண்டு தீர்ப்புகளில் மக்களின் ஜனநாயக உரிமைக்குச் சாதகமாகவே தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, இவ்விடயத்திலும் நாட்டு மக்கள் மத்தியில் நீதிமன்ற கட்டமைப்பில் நம்பிக்கை நிலவுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

# 30 இலட்ச ரூபா பெறுமதியான 10 கிலோ கேரள கஞ்சாவுடன் இளைஞர் கைது



கிளிநொச்சி வட்டக்கச்சியில் சுமார் 10 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் சந்தேக நபரொருவர் நேற்று முன்தினம் இரவு (06) கைதுசெய்யப்பட்டார்.

கடற்படை மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பில் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவரது மோட்டார் சைக்கிள் ஒன்றும் சுமார் 10 கிலோ கேரள கஞ்சாவும் மீட்கப்பட்டது.

வடக்கின் கடற்படை பிரதேசத்துக்குட்பட்ட வெத்தலக்கேணி கடற்படையினர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் இரவு (06) வட்டக்கச்சி பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பகுதியிலுள்ள வயல் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் சுற்றித்திரிந்த நபர் ஒருவரை விசாரணைக்கு உட்படுத்தியபோதே வயலில் 05 பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 10 கிலோ கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கேரள கஞ்சாவின் மொத்தப் பெறுமதி 30 இலட்ச ரூபாவென தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் கிளிநொச்சியைச் சேர்ந்த 20 வயதுடையவர் என்பதுடன், சந்தேகநபர், கேரள கஞ்சா மற்றும் மோட்டார்சைக்கிள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட நால்வர் பிபிலையில் கைது!

(கெலும் குணதிலக்க)

பிபில மல்லேஹவ பிரதேசத்தில் வீடொன்றை உடைத்து சொத்துகளை திருடியமை, பிபில நகரின் கராஜ் ஒன்றிற்குள் புகுந்து வாகனங்களுக்கு சேதம் விளைவித்தமை போன்ற குற்றங்களுக்காக நால்வர் பிபில பொலிஸாரால் நேற்று முன்தினம் (06) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மல்லஹேவ பகுதி வீடொன்றில் களவாடிய குற்றச்சாட்டில் 18, 22 மற்றும் 23 வயதுடைய மூன்று இளைஞர்களும் பிபில நகரின் கெரேஜ் ஒன்றில் வாகனங்களுக்கு சேதம் விளைவித்த அதே பகுதியைச் சேர்ந்த 31 வயதான ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மற்றும் வீட்டில் திருடப்பட்ட பொருட்கள் சிலவற்றை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# பாராளுமன்ற உறுப்பினர்களின் விருந்துபசாரத்தில் துப்பாக்கிச்சூடு

## நுவரெலியா விடுதி சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நுவரெலியாவில் உள்ள விடுதியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மூன்று உறுப்பினர்கள் தலைமையிலான விருந்துபசாரத்தின்போது இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



குறித்த விடுதியின் பராமரிப்பாளர் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொனராகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கயஷான் நவநந்த, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ, கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக்க மற்றும் அவர்களுடன் வந்திருந்த 30 பேர் கொண்ட அதிதிகள் குழுவினர் கடந்த ஜனவரி 28ஆம் திகதி இரவு அங்கு விருந்தொன்றை நடத்தியுள்ளனர்.

அன்றிரவு 12.00 – 12.15 மணிவரை இரண்டு துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும், மறுநாள் துப்புரவுப் பணிகளின்போது 9 மி.மீ. வெற்று தோட்டா உறைகள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பாராளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக்க தசநாயக்கவுக்கு தெரியப்படுத்தியதையடுத்து, விடுதியின் முகாமையாளர் கடந்த 4ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பின்னர், நுவரெலியா பொலிஸ் குற்றப்பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று அங்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன், அன்றைய தினம் பணிபுரிந்த மூவரிடமும் வாக்குமூலம் பதிவுசெய்தனர்.

எவ்வாறாயினும், துப்பாக்கிச்சூட்டில் எந்தவிதமான சொத்துகளுக்கும் சேதம் ஏற்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் மற்றும் யார் துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள் என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# ஜகார்த்தாவில் சடலமாக மீட்கப்பட்ட இலங்கை தொழிலதிபரின் மரணம் குறித்து நீடிக்கும் மர்மம்

## முறைப்பாடு கிடைக்காததால் விசாரணைகளை ஆரம்பிக்கவில்லையென பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவிப்பு

ஓபெக்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், கோடீஸ்வர வர்த்தகருமான 45 வயதான ஓனேஷ் சுபசிங்கவின் மரணம் தொடர்பில் ஜகார்த்தா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

எவ்வாறாயினும், பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினர் அல்லது உறவினர்களால் மரணம் தொடர்பான முறைப்பாடு இதுவரை தமக்கு கிடைக்கவில்லையெனவும், இதுவரை விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் இலங்கை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மரணம் தொடர்பில் முறையான முறைப்பாடு கிடைக்கும்வரை எங்களால் விசாரணைகளை ஆரம்பிக்க முடியாதென பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அவரது குடும்பத்தின் உறவினர் ஒருவர் ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையில், சடலம் தனிப்பட்ட முறையில் அடக்கம் செய்யப்படும் என்றும் சம்பவம் குறித்து கருத்து தெரிவிக்க விரும்பவில்லை என்றும் கூறினார்.

இதற்கிடையில், இலங்கை வர்த்தகரின் மரணம் குறித்து இந்தோனேசிய சட்ட அமுலாக்க அதிகாரிகள் விசாரணை நடத்தி வருவதாகவும், ஆனால், விசாரணையின் முன்னேற்றத்தை ஊடகங்களுக்கு தெரிவிக்க முடியவில்லை என்றும் ஜகார்த்தாவின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



அறிக்கைகளின்படி, 45 வயதான தொழிலதிபர் தனது பிரேஸிலிய மனைவி, அவரது நான்கு வயது மகள் மற்றும் மற்றொரு நண்பருடன் ஜகார்த்தாவில் அபார்ட்மெண்ட் ஒன்றை முன்பதிவு செய்து தங்கியிருந்தார். அபார்ட்மெண்டில் உள்ள சிசிரிவி காட்சிகளில் சுபசிங்கவின் மனைவி, மகள் மற்றும் அடையாளம் தெரியாத பெண்ணொருவர் கடந்த செவ்வாய்க்கிழமை (02) வாசலில் தொந்தரவு செய்யாதே என்ற பலகையை வைத்துவிட்டு அபார்ட்மெண்டிலிருந்து வெளியேறியமை தெரியவந்தது.

எவ்வாறாயினும் கொழும்பிலுள்ள குடும்பத்தினர் கடந்த செவ்வாய்க்கிழமை வரை தொழிலதிபர் தொடர்பில் இருந்ததாகவும் அதன்பிறகு தொடர்புகொள்ள முடியவில்லை என்றும் அடுக்குமாடி குடியிருப்பு பாதுகாப்பு அதிகாரிகளை தொடர்புகொண்டு வினவினர்.

பாதுகாப்பு அதிகாரிகள் சென்று அவரது குடியிருப்பை பார்வையிட்டபோது சுபசிங்க உயிரிழந்த நிலையில் காணப்பட்டாரெனவும் அவரை மீட்டதுடன், அவருடன் தங்கியிருந்த மனைவி, மகள் மற்றும் அவரது நண்பர் எங்கு இருக்கிறார்கள் என்பது குறித்த தகவல் எதுவும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் இந்தோனேசியாவில் இல்லை என்றும் சந்தேகிக்கப்படுகிறது. எனினும், இதுகுறித்து இன்னும் உத்தியோகபூர்வமான தகவல்கள் எதுவும் உறுதிப்படுத்தப்படவில்லை.

# வெலிசர கடற்படை மைதானத்தில் ரக்பி போட்டிகள் நடத்தத் தடை

கடற்படையினர் பங்கேற்கும் அனைத்து ரக்பி போட்டிகளையும் பொது மைதானத்தில் நடத்த இலங்கை ரக்பி தீர்மானித்துள்ளதுடன், வெலிசர கடற்படை மைதானத்தில் ரக்பி போட்டிகள் நடத்தக் கூடாதெனவும் அதன் தலைவர் ரிஸ்வி இல்லியாஸ் நேற்று தெரிவித்தார்.

வெலிசர கடற்படை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (5) கடற்படை அணிக்கும் கண்டி அணிக்கும் இடையிலான முதலாவது பிரிவு ரக்பி போட்டியின்போது போட்டி இயக்குனர் தாக்கப்பட்டதையடுத்து குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது குறித்து இலங்கை ரக்பியின் தலைவர் ரிஸ்வி இல்லியாஸ் குறிப்பிடுகையில்,

எதிர்காலத்தில் கடற்படை பங்கேற்கும் அனைத்துப் போட்டிகளையும் பொது மைதானங்களில் நடத்தவும் வெலிசர கடற்படை மைதானத்தில் ரக்பி போட்டிகள் நடத்தக் கூடாதெனவும் இலங்கை ரக்பி தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார்

போட்டி நடுவர் பலரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை ரக்பி போட்டி குழுத் தலைவரும் இலங்கை ரக்பியின் பிரதித் தலைவருமான ஓய்வுபெற்ற குரூப் கப்டன் நளின் டி சில்வா தலைமையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

# ஒலுவில் துறைமுகத்தில் ரின்மீன் தொழிற்சாலை

## கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் முன்னிலையில் இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்து





உள்ளூர் ரின்மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில், தனியார் நிறுவனம் ஒன்றுடன் நேற்று (07) ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அம்பாறை ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தில் அமைந்துள்ள ரின்மீன் உற்பத்தித் தொழிற்சாலையை தனியார் முதலீட்டாளர் ஊடாக புனரமைத்து மீண்டும் இயங்கச் செய்யவே குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதன்மூலம் உற்பத்தியை அதிகரிக்கவும், இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கவும் முடியுமென நம்பப்படுகிறது. கடற்றொழில் அமைச்சரால் எடுக்கப்பட்ட தொடர் முயற்சியின் பெறுபேறாகவே குறித்த திட்டம் நடைமுறைக்கு வந்தது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் இருதரப்பு ஒப்பந்தம் நேற்று (07) கைச்சாத்திடப்பட்டது.

தனியார் கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கும் நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்குமிடையே குறித்த ஒப்பந்தம் அமைச்சில் கைச்சாத்தானமை குறிப்பிடத்தக்கது.

# தோசத்தை நீக்குவதாக தெரிவித்து பூசகரால் துஷ்பிரயோகத்துக்குள்ளான 12 வயது சிறுமி

## பெற்றோரின் மூட நம்பிக்கையே காரணம் - சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண

காலி, ஓபாத்த பிரதேசத்தில் 12 வயது சிறுமிக்கு பிரார்த்தனை செய்வதாக குறிப்பிட்டு, குறித்த சிறுமியை எட்டு நாட்கள் அறையொன்றில் தடுத்துவைத்து அவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் பூசகரொருவரை கைதுசெய்வதற்கான விசாரணைகளை ஓபாத்த பொலிஸார் ஆரம்பித்திருக்கின்றனர்.

இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சிறுமி கராப்பிட்டிய போதனா வைத்திய சாலையின் சட்ட மருத்துவ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், சிறுமி துஷ்பிரயோகப்படுத்தப்பட்டுள்ளமை பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வைத்தியர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

கணவருக்கு இருக்கும் தோசத்தை நீக்குவதாக தெரிவித்து, அவரின் மனைவி இந்த பூசகரை அவரது வீட்டுக்கு அழைத்துவந்து அவருக்கு கிரியைகள் செய்துள்ளதுடன், 12 வயது சிறுமிக்கு கடவுளின் வரத்தைப் பெற்றுக் கொடுப்பதாக பூசகர் தெரிவித்ததால் குறித்த பூஜை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் அதிகாரியொருவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தனது மகளுக்கு இறை அருளை பெற்றுக் கொள்வதற்கு பெற்றோர் பூசகரிடம் விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள்.

தொடர்ச்சியாக எட்டு நாட்கள் பூஜை செய்தால் அவருக்கு இறையருள் கிடைக்குமென்று பூசகர் அறிவித்திருந்ததை தொடர்ந்து, குறித்த சிறுமியுடன் அந்த வீட்டின் அறையொன்றில் பூசகர் எட்டு நாட்களையும் கழித்துள்ளதாக பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

08 நாட்கள் கழிந்து, எட்டாம் நாள் இரவு சிறுமியை மாத்திரம் வீட்டில் விட்டுவிட்டு தான் அறிவிக்கும்வரை வீட்டிலுள்ள சகலரும் வீட்டிலிருந்து வெளியேறுமாறு பூசகர் அறிவித்திருக்கிறார்.

இறையருளினூடாக பெற்றுக்கொடுக்கப்பட்ட உத்தரவின் காரணமாக அந்த உத்தரவை மதித்து, சிறுமியை பூசகரிடம் ஒப்படைத்துவிட்டு பெற்றோர் உள்ளிட்ட வீட்டிலிருந்த சகலரும் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

அந்த பிரதேசத்தில் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் பூசகர் சிறுமியை துஷ்பிரயோகம் செய்துள்ளதுடன், இது தொடர்பில் யாருக்கும் கூறவேண்டாம் என்றும் மீறி கூறினால் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரையும் கொலை செய்துவிடுவேன் என்று பூசகர் கத்தியைக் காட்டி அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும் குறித்த சிறுமி தெரிவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்திருக்கிறார்கள்.

இதுதொடர்பில் அவரின் மாமிக்கு சிறுமி அறிவித்திருக்கிறார். அதன் பின்னர் அவர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருக்கிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோஹண, மூடநம்பிக்கைகளினால் சிறுமியின் வாழ்க்கையை இருளாக்கியிருக்கிறார்கள். இதுபோன்ற மோசடிக்காரர்களிடம் சிக்கிக் கொள்ள வேண்டாம் என்று மக்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

சிறுமியை இவ்வாறு அறையொன்றில் ஆணொருவருடன் தனிமைப் படுத்தியதனூடாக, சிறுமியின் பெற்றோர் பாரதூரமான குற்றத்தை இழைத்திருக்கிறார்கள். பெற்றோர் சிந்தித்து மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றுச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுமி இன்னும் பூப்பெய்தவில்லை என்று அவரின் தாயார் பொலிஸாருக்கு அறிவித்திருக்கிறார்.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கெலும் குணதிலக்க)

ஹெரோயின் வைத்திருந்த வெலவத்தை பிரதேசத்தில் 'வெட்டு' என அழைக்கப்படும் நபர் ஒருவர் மொனராகலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இந்த சந்தேக நபர் ஹெரோயின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை தொடர்பில் பல தடவைகள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு தண்டனை பெற்றவர்.

சந்தேக நபரும் அவரிடமிருந்து மீட்கப்பட்ட 5 கிராம் ஹெரோயினும் மொனராகலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

மொனராகலை தலைமையகப் பொலிஸ் பரிசோதகர் பி.எஸ்.சர்மிந்த சஞ்சீவ மற்றும் அதிகாரிகள் குழுவினர் இந்த சுற்றிவளைப்பை நேற்று முன்தினம் (06) மேற்கொண்டிருந்தனர்.

# வெல்லவாயவில் வீடுடைத்து 18 ஆயிரம் ரூபா கொள்ளை

(கெலும் குணதிலக்க)

வெல்லவாய, அடலிவெவ வெஹெரய பிரதேசத்தில் வீடொன்றை உடைத்து 18 ஆயிரம் ரூபா பணம் மற்றும் பெறுமதியான பொருட்கள் நேற்று முன்தினம் (06) திருடப்பட்டுள்ளதாக வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் சமையலறைக் கதவை உடைத்து உள்ளே நுழைந்த திருடன், அறையின் அலுமாரியில் இருந்த 18 ஆயிரம் ரூபா மற்றும் பொருட்களை திருடிக்கொண்டு சமையலறைக் கதவு வழியே வெளியேறியுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் வெல்லவாய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.













பிரித்தானிய சைவமுன்னேற்ற சங்கத்தினால் பண்ணிசை பரீட்சைகள் நடத்தப்பட்டு, சான்றிதழ் வழங்கும் வைபவம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் நிரஞ்சன் தலைமையில், கலாநிதி சிவஸ்ரீ. கு.வை.க.வைத்தீஸ்வர குருக்கள் முன்னிலை வகிக்க நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்துகொண்டார்.

# பெலவத்தையில் கொல்லப்பட்ட ஆடையக உரிமையாளர் குறித்து திடுக்கிடும் தகவல்கள்

## பொலிஸ் விசாரணையில் வெளியாகின

ஆடையக உரிமையாளரான ரொஷான் வன்னிநாயக்க என்ற வர்த்தகர் கொலைச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள இளம் ஜோடியை 24 மணிநேரம் தடுத்துவைத்து விசாரணைகளை மேற்கொள்ள கடுவெல நீதவான் நீதிமன்றம் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு அனுமதி வழங்கியதையடுத்து பல திடுக்கிடும் சம்பவங்கள் அம்பலமாகியுள்ளன.

கொலையாளியான 27 வயது சந்தேகநபரும், 49 வயதான வர்த்தகரும் ஓரினச்சேர்க்கையாளர் டேட்டிங் கிளப்பில் அங்கத்தவர்கள். சந்தேகநபர் அந்த கிளப்பின் மூலம் பணத்திற்காக பல்வேறு நபர்களுடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வந்ததாகவும் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரின் வாக்குமூலத்தில் வெளியான தகவல்கள் வருமாறு,

வர்த்தகரின் பணப்பையிலிருந்து திருடப்பட்ட நான்கு கடன் அட்டைகளில் இரண்டு மட்டுமே சந்தேகநபர் வசம் காணப்பட்டன. மீதமுள்ள இரண்டு கிரெடிட் கார்டுகளுக்கு என்ன ஆனது என்பது குறித்து தங்களுக்குத் தெரியாது என்றும் குறித்த வர்த்தகரின் பணப்பையைக் கூட தாங்கள் திருடவில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

இந்த சந்தேக நபர் வர்த்தகரின் கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தி அவர்கள் இந்தோனேசியாவுக்குச் செல்வதற்கான ரிக்கெட்டுகளை முன்பதிவு செய்திருந்ததுடன், இதே மொபைல் போனை பயன்படுத்தி பலமுறை அழைப்பு மேற்கொண்டதுடன், ஜனவரி 31ஆம் திகதி வெள்ளவத்தைக்குச் சென்றதாகவும், அப்போது தொலைபேசியைக் கடலில் வீசியதாகவும் அவர் பதிலளித்திருந்தார்.

கையடக்கத் தொலைபேசியை வீசி எறிந்ததாக சந்தேகநபர் கூறிய இடத்தில் பொலிஸ் விசேட குழுவொன்று தேடுதல் நடத்தியபோதிலும் இதுவரையில் அது கண்டுபிடிக்கப்படவில்லை. தொழிலதிபர் பயன்படுத்தியதாகக் கூறப்படும் ஆணுறையைத் தேடி தொழிலதிபர் கொல்லப்பட்ட வீட்டில் நேற்று மீண்டும் பொலிஸார் சோதனையிட்டனர். இளம் ஜோடி தொழிலதிபரின் வீட்டுக்கு வருவதற்கு முன்னர் மருந்துக்கடையொன்றில் 3 ஆணுறைகளை வாங்கியிருந்தனர். தொழிலதிபரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது வீட்டில் இரண்டு ஆணுறைகள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அந்த ஆணுறைகளில் ஒன்று பயன்படுத்தப்பட்டதாகவும், ஒன்று பயன்படுத்தப் படாமல் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். மூன்று ஆணுறைகளில் இரண்டு ஆணுறைகள் பயன்படுத்தப்பட்டதாக சந்தேக நபர் விசாரணையின்போது தெரிவித்துள்ளார்.

பயன்படுத்திய ஒரு ஆணுறையை 3ஆவது மாடியிலிருந்து வெளியே வீசியெறிந்ததாகவும் தெரிவித்திருந்தார். அதன்படி நேற்று காணாமல் போன மூன்றாவது ஆணுறையை பொலிஸார் தேடியதுடன், இந்தச் சோதனையில் தொழிலதிபரை தலையில் அடித்துக் கொல்ல பயன்படுத்தப்பட்ட கம்பம் ஒன்றை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இந்த கம்பம்தான் தொழிலதிபரை கொல்ல பயன்படுத்தப்பட்டதா என்பதை உறுதிசெய்ய இது அரச பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்படவுள்ளது.

கண்டெடுக்கப்பட்ட ஆணுறை டிஎன்ஏ பரிசோதனைக்கும் அனுப்பப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் சிசிடி அதிகாரிகள் நடத்திய நீண்ட விசாரணையின்போது, இந்த தொழிலதிபரை ஓரினச்சேர்க்கையாளர் டேட்டிங் செயலி மூலம் ஒரு மாதத்திற்கு முன்பு தெரிந்து கொண்டதாக அவர் கூறினார். அவர்கள் செயலி மூலம் செய்திகளை பரிமாறிக்கொண்டாலும், ஜனவரி 30ஆம் திகதியே முதல்முறையாக சந்தித்ததாக சந்தேக நபர் கூறினார்.

இந்த முதல் சந்திப்பின்போது தொழிலதிபர் கொல்லப்பட்டதாக சந்தேகநபரின் வாக்குமூலங்களிலிருந்து தெரிகிறது என்று ஒரு உயர் பொலிஸ் அதிகாரி கூறினார். சந்தேகநபர் நாரஹேன்பிட்டியில் உள்ள தனது பூர்வீக வீட்டில் அண்மைக்காலம் வரை தனது மனைவியுடன் வசித்து வந்துள்ளார். எவ்வாறாயினும், வர்த்தகரின் கொலையின்போது அவர்கள் கொலன்னாவையிலுள்ள மனைவியின் பெற்றோரின் வீட்டில் வசித்து வந்தனர்.

சந்தேகநபர் ஜனவரி 30ஆம் திகதி வர்த்தகரைச் சந்திக்கத் தீர்மானித்து பணம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பெலவத்தை வீட்டிற்கு வந்துள்ளார். தன்னை வந்து சந்திக்குமாறு வர்த்தகரிடம் இருந்து தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டதுடன், ஆணுறைகளை வாங்கிக்கொண்டு வருமாறும் தெரிவித்ததாக சந்தேகநபர் கூறியுள்ளார். அனைத்து செய்தி பரிமாற்றங்களும் வட்ஸ்அப் மூலம் நடந்ததாகவும் கூறினார்.

அப்போது சந்தேக நபர் தெஹிவளையில் இருந்ததால் களுபோவிலவில் உள்ள மருந்தகம் ஒன்றில் ஆணுறைகளை வாங்கிக்கொண்டு பெலவத்தைக்கு சென்று, அங்கு வந்த வர்த்தகரின் காரில் ஏறிச்சென்றதாக சந்தேக நபர் கூறியுள்ளார்.

மேலும் தாங்கள் இரண்டு மணி நேரம் அங்கு தங்கியிருந்ததாகவும் வர்த்தகரும், சந்தேகநபரும் உறவில் ஈடுபட்டதாவும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் சந்தேகநபர் தொழிலதிபரிடம் ஒரு இலட்சம் ரூபா கேட்டுள்ளார். தன்னிடம் பணம் இல்லை என்று அந்த தொழிலதிபர் கூறியதால் கோபமடைந்துள்ளார். இரண்டாவது முறையாக உறவுபேண வர்த்தகர் அணுகியபோது, தனக்குப் பணம் தராததால் கோபமடைந்து தொழிலதிபரை தலையில் கம்பத்தால் தாக்கியதாகவும் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 2ஆம் திகதி மாலை பெலவத்தையில் உள்ள அவரது வீட்டில் கண்டெடுக்கப்பட்ட வர்த்தகரின் சடலம் பல நாட்களாக நீரில் மூழ்கியிருந்தமையால் அடையாளம் காண முடியாத அளவுக்கு சிதைக்கப்பட்டிருந்தது. அதனால் குடும்ப உறுப்பினர்கள் யாராலும் அவரை அடையாளம் காணமுடியவில்லை. பிரேதப் பரிசோதனையில், மழுங்கிய ஆயுதத்தால் அடித்ததால் மரணம் நிகழ்ந்தமை தெரியவந்துள்ளது.

# தென்னை மரத்திலிருந்து விழுந்த 47 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழப்பு!

(மீராவோடை செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி பகுதியில் தென்னை மரத்திலிருந்து தவறி விழுந்து குடும்பஸ்தரொருவர் திங்கட்கிழமை (06) உயிரிழந்துள்ளார்.

சித்தாண்டி-02, பிரதான வீதியைச் சேர்ந்த சிவகுரு குமாரசாமி (வயது - 47) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவதினம் முற்பகல் 11.30 மணியளவில் தனது வீட்டு முற்றத்தில் இருக்கும் சுமார் 50 அடி உயரமான தென்னை மரத்தில் ஏறி தேங்காய்களை பறித்துவிட்டு, நோயாளியான தனது மனைவிக்காக இளநீரை பறிப்பதற்காக ஆயத்தமானபோது கால் வழுக்கி சடுதியாக நிலத்தில் விழுந்துள்ளார். தென்னை மரத்திற்கு அருகாமையிலுள்ள பலாமரக் கிளையையும் உடைத்துக்கொண்டு தனது தந்தை நிலத்தில் விழுவதை அவதானித்த மூன்று பிள்ளைகளும் தந்தையைக் காப்பாற்ற அயலவர்களை சத்தமிட்டு அழைத்துள்ளனர்.

பின்னர் அயலவர்களின் உதவியுடன் அவரை மாவடிவேம்பு பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றபோது, அவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸீருடன் சம்பவ இடத்துக்கு சென்ற சந்திவெளி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். தென்னை மரத்திலிருந்து விழுந்து மரணித்தவரின் உடலின் வெளிப்புறப் பகுதிகளில் காயங்கள் ஏதுமில்லாததால், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, பிரேத பரிசோதனைகள் முடிவுற்றதும், சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு, மரண விசாரணை அதிகாரி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# இரவோடிரவாக ரணிலின் பஸ்ஸில் ஏறிச் சென்றவரே அதாவுல்லாஹ் எம்.பி.

## அவரே தன்னை சுயபரிசீலனை செய்யவேண்டுமென்கிறார் அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவர் சபீஸ்

(பாறுக் ஷிஹான்)

தேசிய காங்கிரஸ் தலைவர் எம்மை கிடாக்கள் என்று கூறியதை நான் அறியவில்லை. ஆனால், யாருக்கும் தெரியாமல் எல்லோரையும் நட்டாற்றில் விட்டுவிட்டு அவர் மட்டும் இரவோடிரவாக ரணிலின் பஸ்ஸில் ஏறிச் சென்றதை காண்கின்றோம். இந்த வேளையில் மர்ஹூம் அஷ்ரபின் ஆன்மா தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவரை பார்த்து நீங்கள் செய்த வேலை 'கிடா அல்ல மடக்கிடா' ஒன்று செய்த செயலுக்கு ஒப்பானதாகுமென பேசும் - என்று அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினரும் அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவருமான எஸ்.எம்.சபீஸ் தெரிவித்தார்.

திங்கட்கிழமை (06) அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தேர்தல் நடைபெறுமா இல்லையா என்பதில் பாரிய சந்தேகங்கள் இருக்கின்றன. அரசாங்கமானது தோல்வியை எதிர்கொள்கின்ற நிலைக்குச் செல்லாது என்பதனால் இத்தேர்தல் நடைபெறாது என்பதை நாம் நம்புகின்றோம். தேசிய காங்கிரஸ் தலைவர் எம்மை கிடாக்கள் என்று கூறியதை நான் அறியவில்லை. அவருடைய பேட்டிகள், பத்திரிகையாளர் மாநாடுகளை அண்மைக்காலமாக நாங்கள் எவரும் பார்ப்பதில்லை.



ஏனெனில், அண்மைக்காலமாக அவரது பேட்டிகள் சுவாரஸ்யமற்று போய்விட்டன. அவற்றை பார்ப்பதற்கு நாங்கள் நேரம் ஒதுக்குவது கிடையாது.

கடந்த காலங்களில் அவர் எத்தனை கட்சிகளில் இருந்து மாறினார் என்பது அவருக்குத் தெரியும். முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகி வந்த பின்னர் எத்தனை பேருடன் இணைந்து செயற்பட்டுள்ளார் என்பதை மக்கள் அறிவார்கள். உதாரணமாக, மஹிந்தவிடமிருந்து மைத்திரியிடம் பின்னர் கோட்டபாய ராஜபக்ஷவிடம் சென்றார். இப்போது அவர் எங்கு இருக்கின்றார் என்பதை சுயபரிசீலனை செய்ய வேண்டும்.

அதேவேளை, கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் மர்ஹூம் அஷ்ரப் ரணிலின் பஸ்ஸில் ஏறக்கூடாது என எதிர்வு கூறிச் சென்றிருந்தார் என மேடைகளில் கூறி வந்தவர் அதாவுல்லாஹ் எம்.பி. ஆனால், யாருக்கும் தெரியாமல் எல்லோரையும் நட்டாற்றில் விட்டுவிட்டு அவர் மட்டும் இரவோடு இரவாக ரணிலின் பஸ்ஸில் ஏறிச் சென்றதை காண்கின்றோம். இவ்வேளையிலே மர்ஹூம் அஷ்ரபின் ஆன்மா தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரை பார்த்து நீங்கள் செய்த வேலை கிடா அல்ல மடக்கிடா ஒன்று செய்த செயலுக்கு ஒப்பானதாகுமென பேசிக்கொண்டிருக்கும் என்று நான் நினைக்கின்றேன். கடந்த 15 வருடங்களாக தனி ஒருவராக இருந்துகொண்டு ரணிலை எதிர்த்த ஒரு ஆளாகவே நாம் பார்த்தோம். அதை நாங்கள் வரவேற்றிருந்தோம். ஆனால், தற்போது ரணிலை சிலாகித்துப் பேசுவதும் அவர் தான் இந்நாட்டின் சிறந்த தலைவர் எனக் கூறுவதும் எப்படியாயின் ஒரு காற்று ஊதப்பட்ட பலூன் ஓட்டை விழுந்து காற்று இறங்கி சுருங்கியதற்கு ஒப்பாக அவரது விம்பம் வெளிப் படுகின்றது. அண்மைக் காலமாக அவர் நிலைதடுமாறி திரிகின்றார். அதைப் பார்க்கின்றபோது எமக்கு பரிதாபமாகவே இருக்கின்றது. அவருக்காக நாங்கள் பிரார்த்திக்கின்றோம் - என்றார்.

# சுகாதாரப் பிரிவினரால் கல்முனையில் சுற்றிவளைப்பு



(நிந்தவூர் நிருபர்)

கல்முனை நகர்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பாவனைக்குதவாத பல உணவுப் பொருட்கள் மற்றும் உணவு செய்யும் பாத்திரங்கள் என்பன திங்கட்கிழமை (06) கைப்பற்றப்பட்டுள்ளன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸின் வழிகாட்டலுக்கமைய கல்முனை நகர்ப்பகுதிகளில் சுற்றாடல் தொழில்சார் மற்றும் உணவுப் பாதுகாப்பு சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.பௌசாத் தலைமையில் உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர்கள், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து மேற்கொண்ட இச்சுற்றிவளைப்பில் பாவனைக்குதவாத உணவுப் பொருட்கள் மற்றும் பாத்திரங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கைப்பற்றப்பட்ட பொருட்கள் பிரதி சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் எம்.பீ.ஏ.வாஜித்திடம் ஒப்படைக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதுடன் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டு சுத்தமான சுற்றுச்சூழலை உருவாக்கவும் உணவுப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தவும் இரண்டு வார கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

# போடியார் புலம்பல்!



கிழக்கில இருந்து ஆயிரம் இளைஞர்கள பாகிஸ்தான் நாடு கூப்பிட்டுள்ளதாம் எண்டொரு செய்திய பார்த்தன். என்னடாப்பா ஏதோ பயிற்சிய குடுத்து இலங்கய இஸ்லாமிய பயங்கரவாதத்தில்ல சாகடிக்கிற திட்டமோ எண்டு காத்தான்குடி ஹாஜியாரும் எனக்கிட்ட புறு புறுத்தவர்.. ஏதோ ஒரு 'சூத்துமம்' இதுக்குள இருக்குப்போலதான் கிடக்கு. இதைக்காட்டியே சிங்கள பேரினவாதிகள் பயங்கரவாத தடைச்சட்டத்த நீக்க வேண்டாம் என சொன்னாலும் சொல்வாங்க எலுவா

# களுவாஞ்சிக்குடி வங்கிகளின் பாதுகாப்பு தொடர்பில் பொலிஸார் அறிவுறுத்தல்





(மட்டக்களப்பு செய்தியாளர்)

வங்கிகளின் பாதுகாப்பைப் பலப்படுத்துவது தொடர்பில் வங்கி முகாமையாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் திங்கட்கிழமை (06) மாலை இடம்பெற்றது.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் அபயவிக்கிரமவின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் களுவாஞ்சிக்குடி பிரதேசத்திலுள்ள அரச மற்றும் தனியார் வங்கி முகாமையாளர்கள் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜோய் கலந்துகொண்டு வங்கி முகாமையாளர்களுக்கு பாதுகாப்பு தொடர்பிலான விளக்கங்களையும் தெளிவூட்டல்களையும் வழங்கினார்.

நாட்டின் பல இடங்களில் அண்மையில் வங்கிகளின் தன்னியக்க பணவைப்பு மற்றும் மீள எடுத்தல் இயந்திரங்கள் களவாடப்பட்டுள்ளன. இந்நிலையில், களுவாஞ்சிக்குடி பிரதேசத்திலுள்ள வங்கிகளின் பாதுகாப்புகளைப் பலப்படுத்த வேண்டும். இதற்கு பொலிஸாரின் முழு ஒத்துழைப்புகளும் வழங்கப்படும். வங்கி முகாமையாளர்கள் இதில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். மக்கள் பணத்தையும், தங்க ஆபரணங்களையும், வங்கிகளை நம்பியே வைப்பிலிடுகின்றார்கள். அதனை முறையாக உரிய பாதுகாப்புடன் பேணவேண்டியது வங்கிகளின் கடப்பாடாகும் - என்றார்.

# குருதிக்கொடை முகாம்





(மட்டக்களப்பு)

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 75ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு "உதிரம் கொடுப்போம் உயிரைக் காப்போம்" எனும் தொனிப்பொருளில் "குருதிக்கொடை வழங்கல்" முகாம் திங்கட்கிழமை (06) மட்டக்களப்பு, போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் செல்வி ஆர்.ராகுலநாயகியின் வழிகாட்டலில் சமூக வலுவூட்டல் அபிவிருத்தி நிறுவனத்தின் (ORCED) அனுசரணையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் டி.துலாஞ்சனன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சசிகுமார், மட்டக்களப்பு பிராந்திய இரத்த வங்கி வைத்திய அதிகாரி திருமதி கீர்த்திகா மதனழகன், இரத்த வங்கி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டதுடன், பாலையடிவட்டை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ உத்தியோகத்தர்கள் மற்றும் போரதீவுப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் சிலர் கட்சியை தோற்கடிக்க முயற்சி

## முன்னாள் மாகாண அமைச்சர் உதுமாலெப்பை

(திகாமடுல்ல செய்தியாளர்)



நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்தும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தும் போட்டியிடுவது என அறிவிக்கப்பட்ட நிலையில், அட்டாளைச்சேனை பிரதேச சபையில் பாராளுமன்றத் தேர்தலை இலக்காகக்கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் சிலர் கட்சியை தோற்கடிப்பதற்காக கட்சிக்கு எதிரான துரோகச் செயலில் ஈடுபட்டுள்ளதாக கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை அல்-முனிறா வட்டார கூட்டம் பீச் ஹவுஸில் நடைபெற்றபோது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஆட்சிமாற்றம் செய்வதற்கு நீண்டகாலமாக பல தியாகங்களுடன் எமது கட்சி செயற்பட்டு வருகிறது. இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி தனது வேட்பாளர்களை தொலைபேசி சின்னத்தில் போட்டியிட வைப்பதில் எமக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. ஆனால், முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த முக்கியஸ்தர்களை ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பட்டியலில் போட்டியிட வைத்து முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களை தோற்கடிக்க எடுக்கப்பட்டுள்ள துரோகச் செயல் குறித்து கட்சியின் உயர் பீடத்திற்கு தெரிவித்துள்ளேன்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையில் சிறந்த வேட்பாளர்களை நிறுத்தி 51வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று தனியாக ஆட்சியைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டவேளை, பலவீனமான வேட்பாளர்களை போட்டியிட வைத்து தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களை தோற்கடிக்க எடுத்த முயற்சிகளை முறியடித்துள்ளோம்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முஸ்லிம் காங்கிரஸ் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் தலைமையில் சுயேச்சைக்குழு ஒன்றில் போட்டியிட வைத்து முஸ்லிம் காங்கிரஸை தோற்கடிக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுக்கு பின் தமது கட்சியை ஆதரித்து எத்தனை இலட்சம் மக்கள் வாக்களித்துள்ளனர் என்பதையும் எத்தனை பிரதேச சபைகளின் ஆட்சியை எமது கட்சி கைப்பற்றியுள்ளது என்பதையும் நாட்டு மக்கள் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். உள்ளூராட்சி சபைத் தேர்தல் தானே இத்தேர்தலில் ஆட்சிமாற்றம் செய்ய முடியாது என மக்கள் கவனயீனமாக நடந்துவிடக்கூடாது - என்றார்.

# மருந்துப் பொருட்கள் அன்பளிப்பு



(சாய்ந்தமருது செய்தியாளர்)

அம்பாறை, மத்திய முகாம் பிரதேச வைத்தியசாலைக்கு கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஐந்து இலட்ச ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருந்துப் பொருட்களை வழங்கியுள்ளது.

இவற்றைக் கையளிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (06) வைத்தியசாலை முற்றத்தில் வைத்திய அதிகாரி டாக்டர் கே.ஐ.ஃப. கொடிக்கார தலைமையில் இடம்பெற்றது.

நாட்டில் மருந்துகளுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவி வருகின்ற நிலையில், இவ்வைத்தியசாலைக்கு அவசர தேவையாக இருந்துவந்த மருந்துப் பொருட்களை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கமைய, வை.எம்.எம்.ஏ. பேரவையின் ஒருங்கிணைப்பில் துரிதமாக பெற்றுத் தந்தமைக்காக ரஹ்மத் மன்சூருக்கு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் இதன்போது நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

# 99ஆவது வருடாந்த புஹாரி ஹதீஸ் மஜ்லிஸ் ஆரம்பம்





(மாளிகைக்காடு நிருபர்)

மருதமுனையின் முதலாவது பள்ளிவாசலான மருதமுனை மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆப் பள்ளிவாசலின் 99ஆவது வருடாந்த புஹாரி ஹதீஸ் மஜ்லிஸ் திங்கட்கிழமை (06) மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டது.

மருதமுனை ஜம்மியதுல் உலமா மற்றும் அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனத் தலைவர் அஷ்ஷெய்க் எவ்.எம்.அஹமதுல் அன்சார் மௌலானா (நழீமி) தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில் பல முக்கியமான உலமாக்கள் கலந்துகொண்டு விசேட மார்க்கச் சொற்பொழிவுகளை நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்வின் ஆரம்ப உரையினை மஸ்ஜிதுந் நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் எம்.ஐ.எம். முஹர்ரப் நிகழ்த்தினார். செயலாளர் ஏ.ஏ.புழைல், பள்ளிவாசல் முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள், மரைக்காயர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் இந்த ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர்.




கிண்ணியாவில் இயங்கிவரும் சமூக தீர்மானத்திற்கான பெண்கள் அமைப்பின் மூலமாக பாடசாலை மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள் நேற்று (07) கிண்ணியா அலுவலகத்தில் வைத்து அமைப்பின் தலைவி ரோஹினா மஹ்ரூப் வழங்கினார். தெரிவுசெய்யப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சுமார் 20 மாணவர்களுக்கு மேற்படி பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டன. (கிண்ணியா நிருபர்)

# யானைத் தாக்கி குடும்பஸ்தர் பலி

(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

சம்மாந்துறை நெய்னாகாடு பிரதேசத்தில் யானை தாக்குதலுக்குள்ளாகி குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை(06) மாலை 5.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, வயல்வேலை நிமித்தம் நெய்னாகாடு பிரதேசத்தில் தனது விவசாய நடவடிக்கைகளில் வழமைபோன்று ஈடுபட்டிருந்த இவர் யானைத் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார். சம்மாந்துறை சென்னல் கிராமம் 2 ஐச் சேர்ந்த ஆதம்பாவா நபீஸத் (வயது 50) எனும் விவசாயியே இவ்வாறு பலியாகியுள்ளார்.

இறக்காமம் பொலிஸார் இதுபற்றிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓய்வுபெற்றார் ஆரோன் பிஞ்ச்




அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ஆரோன் பிஞ்ச் ஓய்வுபெற்றார். ரி20 சம்பியனான அவுஸ்திரேலிய கெப்டன் பிஞ்ச் சொந்த மண்ணில் 2015இல் 50 ஓவர் உலகக் கிண்ண வெற்றிக்கு வழிகாட்டினார்.

ரி20 அணியின் கெப்டனாக 76 போட்டிகளில் அவுஸ்திரேலியாவை வழிநடத்தி சாதனை படைத்த ஆரோன் பிஞ்ச் அனைத்து சர்வதேச கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வுபெற்றார்.

2021இல் அவுஸ்திரேலியாவின் முதல் ரி20 உலகக் கிண்ண வெற்றிக்கு வழிகாட்டினார். சொந்த மண்ணில் அதன் தோல்வியுற்ற பட்டத்தைப் பாதுகாப்பதில் கடந்த ஆண்டு மீண்டும் கெப்டனாக இருந்தார்.

36 வயதான பிஞ்ச் 2015இல் அவுஸ்திரேலியாவுடன் சொந்த மண்ணில் 50 ஓவர் உலகக் கிண்ணப் பட்டத்தை வென்றார். 12 வருடங்கள் நீடித்த சர்வதேச வாழ்க்கையில் ஐந்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடினார்.

2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அடுத்த ரி20 உலகக் கிண்ணப் போட்டிவரை வரை நான் விளையாடமாட்டேன் என்பதை உணர்ந்து, பதவி விலகுவதற்கான சரியான தருணம் இதுவாகும், மேலும் அந்த நிகழ்வைத் திட்டமிடுவதற்கும் கட்டியெழுப்ப அணிக்கு நேரம் கொடுப்பதற்கும் இதுவே சரியான தருணம் என பிஞ்ச் செவ்வாயன்று செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

ரி20 கிரிக்கெட்டில் கவனம் செலுத்த கடந்த ஒக்டோபரில் ஒரு நாள் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றார். ரி20 அணிக்கு மாற்று வீரரை அறிவிக்கவில்லை.

146 ஒருநாள் போட்டிகளில் கிட்டத்தட்ட 39 சராசரியிலும், 103 ரி20 சர்வதேச போட்டிகளில் 34.28 சராசரியிலும் 142.53 ஸ்ட்ரைக் ரேட்டிலும் விளையாடினார். 2013இல் இங்கிலாந்துக்கு எதிராக 156 ஓட்டங்களைக் குவித்து, 2018இல் ஹராரேயில் ஜிம்பாப்வேக்கு எதிராக தற்போதைய 172 ஓட்டங்களை 2018இல் பதிவு செய்ததன் மூலம் ரி20 சர்வதேச போட்டிகளில் அதிக ஓட்டங்களை இரண்டு முறை பெற்றுள்ளார்.

# இஷாரா வெற்றிபெற்றார்



இலங்கை மேசைப் பந்து தேசிய மகளிர் சம்பியனான இஷாரா மதுரங்கி ஜோர்தானின் அம்மானில் நடைபெற்ற உலக மேசைப்பந்து முதல் தகுதிச் சுற்று ஆட்டத்தில் ஜோர்தான் வீராங்கனை ஜீனா சடகாவை தோற்கடித்து அடுத்த சுற்றுக்குத் தெரிவானார்.

ஆரம்பத்தில் 11/8 என முன்னிலை பெற்றார். அவர் இரண்டாவது செட்டை 10/12 என கடுமையான போட்டிக்குப் பிறகு இழந்தார். அவர் வலுவாகப் போராடி 13/11, 11/7 என மூன்றாவது மற்றும் நான்காவது செட்களில் வெற்றிபெற்றார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# ஒலிம்பிக்கில் விளையாட ரஷ்ய வீரர்களுக்கு செக் எதிர்ப்பு



2024 பரிஸ் ஒலிம்பிக்கில் நடுநிலைக் கொடியின் கீழ் ரஷ்ய, பெலாரஸ் விளையாட்டு வீரர்கள் போட்டியிடும் யோசனையை செக் ஒலிம்பிக் கமிட்டியும் நாட்டின் அரசாங்கமும் திங்களன்று கடுமையாக சாடியுள்ளன .

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி (IOC) கடந்த மாத இறுதியில், உக்ரைன் மீது சர்வதேச தடைகள் விதிக்கப்பட்டபோதிலும், இரு நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களை பரிஸில் போட்டியிட அனுமதிப்பதற்கான வழிகளை ஆராய்ந்து வருவதாகக் கூறியது.

ஐஓசியின் அறிக்கை மாறுபட்ட எதிர்வினைகளைத் தூண்டியது. அமெரிக்கா, ரஷ்ய மற்றும் பெலாரஸ் விளையாட்டு வீரர்களை பரிஸில் போட்டியிட அனுமதிக்கும் அதேவேளை, ஐரோப்பாவிலுள்ள பல நாடுகள் இந்த யோசனையை எதிர்த்தன.

"ரஷ்ய மற்றும் பெலாரஸ் விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க முடியாது" என்று செக் ஒலிம்பிக் கமிட்டி ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தடைகளை மாற்றுவதற்கான எந்த காரணத்தையும் நாங்கள் காணவில்லை, அது மேலும் கூறியது.

ஆனால், அது செக் விளையாட்டு வீரர்களை விளையாட்டுகளைப் புறக்கணிக்கத் தள்ளாது என்று கூறியது, இது உக்ரைன் அல்லது எஸ்டோனியா உட்பட பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளால் கருதப்பட்டது.

"ஒவ்வொரு தடகள வீரர்களும் பங்கேற்க வேண்டாம் என்று முடிவு செய்தால், நாங்கள் இயல்பாகவே அவர்களின் விருப்பத்திற்கு மதிப்பளிப்போம்" என்று குழு மேலும் கூறியது.

போலந்தின் விளையாட்டு அமைச்சர் கமில் போர்ட்னிசுக் கடந்த வாரம், ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்கள் மற்றும் பிரிட்டன் உட்பட 40 நாடுகள், ரஷ்ய மற்றும் பெலாரஸ் விளையாட்டு வீரர்களின் பங்கேற்புக்கு எதிராக நிற்கும் என எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

செக் பிரதமர் பீட்டர் ஃபியாலா திங்களன்று கோரஸில் இணைந்தார்.

"உக்ரேனிய விளையாட்டு வீரர்கள் தங்கள் நாட்டைப் பாதுகாக்கும்போது இறந்து கொண்டிருக்கும் நேரத்தில், ரஷ்யா மற்றும் பெலாரஸ் விளையாட்டு வீரர்கள் பரிஸில் போட்டியிடுவதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை" என்று அவர் கூறினார்.

"இந்த நிலைமைகளின் கீழ், ஒலிம்பிக் போட்டிகளில் ரஷ்ய விளையாட்டு வீரர்கள் பங்கேற்பது எனக்கு ஒரு நல்ல யோசனையாக இல்லை" என்று ஃபியலா மேலும் கூறினார்.

# கேங்வான் 2024 பதக்கங்களை வடிவமைக்க அழைப்பு







கேங்வான் 2024 குளிர்கால இளைஞர் ஒலிம்பிக் போட்டி களுக்கான தங்கங்களை வடிவமைப்பதற்கான போட்டியை அமைப்பாளர்கள் தொடங்கியுள்ளனர். படைப்பாளிகள் தங்கள் வடைவமைப்பை மார்ச் 8ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். மார்ச் மாத இறுதிக்குள் வெற்றியாளர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென் கொரிய கலாசாரத்தின் கூறுகள் மற்றும் இளைஞர் ஒலிம்பிக் விளையாட்டு சின்னம் ஆகியவற்றை உள்ளடக்கிய பதக்கங்களின் மறுபக்கம் ஏற்பாட்டுக் குழுவால் வடிவமைக்கப்படும். பதக்க வடிவமைப்புப் போட்டியில் முதலிடம் பெறுபவர் கேங்வோனுக்கு சுற்றுப் பயணம், தொடக்க விழா, விளையாட்டுப் போட்டிகளைப் பார்வையிட சந்தர்ப்பம் வழங்கப்படும். வெற்றிபெறுபவருக்கு இன்னும் ஒருவர் அனுமதிக்கப்படுவார். போட்டியில் இரண்டாம் ,மூன்றாம் இடங்களுக்கு பரிசுகளும் உள்ளன.

லொசேன் 2020 யூத் குளிர்கால ஒலிம்பிக் வடிவமைப்புப் போட்டியில் நியூசிலாந்தின் Zakea பேஜ் தனது "பன்முகத்தன்மையில் அழகு" வடிவமைப்பால் வென்றார். அவர், "இந்த முறை நடுவர் குழுவில் இடம்பிடித்தது ஒரு பெரிய மரியாதை" என்று கூறினார், மேலும் பங்கேற்பாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இளையோர் ஒலிம்பிக் போட்டிகளுக்கான பதக்க வடிவமைப்பு போட்டிகள் முதன்முதலில் 2010ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடந்த கோடைகால பதிப்பின் தொடக்கத்தில் நடத்தப்பட்டன.

கேங்வான் 2024 ஜனவரி 19 முதல் பெப்ரவரி 1 வரை திட்டமிடப்பட்டுள்ளது.

## 'மக்கள் எழுச்சிப் பேரணி' மட்டக்களப்பை வந்தடைந்தது!

# அனைத்து தமிழர்களும் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் - வேலன் சுவாமிகள்










*(கல்லடி, மட்டக்களப்பு செய்தியாளர்கள்)*

''இலங்கையின் சுதந்திர தினம் தமிழர்களின் கரிநாள்'' எனப் பிரகடனப்படுத்தி, பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்த வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரணி, இறுதி நாளான நேற்று (07) மட்டக்களப்பை வந்தடைந்தது.

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியானது நேற்று நான்காவது நாளான நிறைவு நாளை காலை வெருகல் ஸ்ரீ வேலாயுதசுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகிய நிலையில், அனைவருக்கும் பொதுவான இறைவன் இந்தப் பேரணியையும் தமிழ் மக்களையும் ஆசிர்வதிக்க வேண்டும் என்று வேலன் சுவாமிகள் எல்லோருக்கும் பொதுவான இறைவனைப் பிரார்த்தித்து ஆசியுரையாற்றினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், வடகிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பாதிக்கப்பட்ட தரப்புகள், சிவில் சமூகங்கள், மதத் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் உட்பட பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது உரையாற்றிய வேலன்சுவாமிகள்,

தமிழினத்தின் பயணம் 2009இற்குப் பிற்பாடு அறவழிப் போராட்டங்களாகவும் எழுச்சிப் போராட்டங்களாகவும் நினைவேந்தல் நிகழ்வுகளாகவும் பல்வேறு பரிணாமங்களில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் மட்டுமல்ல, எங்களுடைய தாயக உறவுகள் புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய நிலையில் உலகளாவிய ரீதியில் இந்த எழுச்சி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் ஏற்பாடு செய்திருக்கின்ற வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய மக்கள் எழுச்சிப் பேரணி ஈழத் தமிழினத்தின் தமிழ்த் தேசிய விடுதலை வரலாற்றில் ஒரு முக்கிய வகிபாகத்தை வகுத்திருக்கின்றது. அந்தவகையில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் இந்த இணைப்பு என்பது நிரந்தரமானது. ஈழத் தமிழினம் பூகோள ரீதியில் இனப் பரம்பலை தொடர்ச்சியாக கொண்டிருக்கக்கூடிய விதத்தில் எங்களுடைய எழுச்சிப் போராட்டங்களையும் சர்வதேச இராஜதந்திரிகளுடன் உரையாடல்களையும் எமது மக்கள் மத்தியில் முன்னெடுக்க வேண்டிய செயல் திட்டங்களையும் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும். தமிழினத்தின் சனத்தொகை பெருக்கப்பட வேண்டும். எங்கெங்கெல்லாம் நிலங்கள் வீணாக இருக்கின்றனவோ அவை எல்லாம் நமது மக்களுக்குரிய சொந்த நிலங்களாக வழங்கப்பட வேண்டும். அவர்கள் அங்கே குடியேறி எங்களுடைய இனத்தின் தொடர்ச்சியை - இனத்தின் பரம்பலை - இனத்தின் எழுச்சியை நிலைநாட்ட வேண்டும் என்கின்ற அனுபவத்தை இந்தப் பேரணி எங்களுக்கு உணர்த்தி நிற்கின்றது.

அந்தவகையில் எங்களுடைய பல்கலைக்கழக மாணவர்கள் அடிப்படையிலேயே மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம், சுய நிர்ணயம் என்கின்ற அடிப்படையில் பொங்குதமிழ் பிரகடனத்தின் அடிப்படையிலேயே இந்தப் பேரணியை முன்னெடுத்திருக்கிறார்கள். தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை கோரிக்கைகளான இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கப்படுகின்ற பேரணிக்கு அனைத்து தமிழர்களும் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

எங்களுடைய இனத்துக்குள்ளும் ஒற்றுமை இருக்கின்றது. ஒற்றுமையால் நாங்கள் எங்களுடைய இலட்சியத்தை அடைய முடியும் என்பதனை காட்டி நிற்கின்றது. மேலும், இன்னமும் பெரிதாக்கப்பட வேண்டும். பலப்படுத்தப்பட வேண்டும். இந்த அடிப்படையிலே இப்பேரணி வெருகலில் ஆரம்பித்து, வாகரைக் கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் உயிர்நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தங்களுடைய பயணத்தை முன்னெடுத்திருக்கிறது.

தொடர்ந்து கதிரவெளிச் சந்தி, மாங்கேணிச் சந்தி, வாழைச்சேனை, அதைத் தொடர்ந்து கிரான், வந்தாறுமூலை, சித்தாண்டி, செங்கலடி என்று தொடர்ந்து பயணித்து தன்னுடைய பயணத்தை மட்டக்களப்பில் நிறைவுசெய்ய இருக்கின்றது என்றார்.

இப்பேரணி வெருகலிலிருந்து வருகை தருகையில் பொதுமக்கள், அரசியல்வாதிகள், ஆலயத் தலைவர்கள், விளையாட்டுக் கழக அங்கத்தவர்கள் எனப் பல ஆயிரக் கணக்கானோர் வீதியெங்கும் திரண்டு நின்று உணர்வுபூர்வமான ஆதரவினை வழங்கினர்.

இதேவேளை, இப்பேரணிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அம்பாறையிலிருந்து ஆரம்பமான பேரணி காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு, கல்லாறு, களுவாஞ்சிக்குடி, குருக்கள்மடம், ஆரையம்பதி, கல்லடிப் பாலம் ஊடாக மட்டக்களப்பு நகரில் வடக்கிலிருந்து கிழக்கை நோக்கிய பேரணியுடன் சங்கமமானது.

# அரச பயங்கரவாதத்தை எதிர்த்து ஓட்டமாவடியில் எழுச்சிப் பேரணி






*(கல்குடா செய்தியாளர்)*

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் 'அரச பயங்கரவாதத்தை இல்லாமல் செய்ய வேண்டும்' என்ற தொனிப்பொருளில் கவனயீர்ப்புப் பேரணி நேற்று (07) செவ்வாய்க்கிழமை ஓட்டமாவடியில் இடம்பெற்றது.

எக்ஸத் ஊடக வலையமைப்பு ஏற்பாடு செய்திருந்த இப்பேரணி சமூக மட்ட அமைப்புகளின் பங்களிப்புடன் வாழைச்சேனை பொலிஸ் நிலைய சந்தியிலிருந்து ஆரம்பமாகியது.

இப்பேரணியானது மட்டக்களப்பு - கொழும்பு வீதியினூடாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தை வந்தடைந்து ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றும் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் யூ.எல்.அப்துல் ஹமீட்டிடம் பேரணியின் ஏற்பாட்டாளர்களால் வழங்கப்பட்டது.

இதன்போது, ''மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்தேர்ச்சியாக இடம்பெறும் அரச பயங்கரவாதத்தினை உடனடியாக நிறுத்த வேண்டும், மாவட்ட முஸ்லிம் மக்களுக்கு தொடர்ந்து இடம்பெற்றுவரும் எல்லைப் பிரச்சினை, மீள்குடியேறிய காணிகளுக்கான உரிமம் பெற்றுக் கொள்ளாமை போன்ற நடவடிக்கைகளுக்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அதிகாரியை நியமிக்க வேண்டும் போன்ற கோஷங்களை எழுப்பிவந்தனர்.

மேலும் ''நாங்கள் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல, தமிழ் சமூகமும் முஸ்லிம் சமூகமும் ஒற்றுமையாக புரிந்துணர்வுடன் வாழ வேண்டும். நாங்கள் முஸ்லிம்களின் உரிமைகள் கிடைக்காமல் தடுக்கும் அதிகாரிகளை மாற்றி பக்கச்சார்பில்லாத அதிகாரிகளை நியமிக்கவும் கோரிக்கை வைப்பதுடன் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டாம்'' என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.

# சம்மாந்துறையில் 45 நாட்களாக பாடசாலைக்கு செல்ல முடியாமல் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள்

## முறைப்பாடுகள் செய்தும் இதுவரை தீர்வில்லையென பெற்றோர் விசனம்



*(பெரியநீலாவணை செய்தியாளர்)*

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட ஜமாலியா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ஒன்பது மாணவர்கள் கடந்த 45 நாட்களாக பாடசாலைக்கு சமுகமளிக்க முடியாமல் தமது கல்வியை இழந்த நிலையில் நிர்க்கதியாகியுள்ளனர். இந்த மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் கல்வி உரிமையை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவறிழைத்துள்ளார்கள் என மாணவர்களின் பெற்றோர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் பெற்றோர்கள் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் மாநாடு திங்கட்கிழமை (06) மாலை சம்மாந்துறையில் நடைபெற்றது. இதன்போது பெற்றோர் தமது கருத்துகளை தெரிவித்திருந்தனர்.

சம்பவம் தொடர்பில் பாடசாலையின் முன்னாள் அபிவிருத்தி சங்கச் செயலாளர் எம்.ஐ.எம்.றிஸ்விகான் தெரிவிக்கையில்,

சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் குறித்த ஜமாலியா பாடசாலையில் 45 இலட்ச ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்ட கட்டட வேலைத்திட்டத்தின்போது பாடசாலை அதிபருக்கும் குறித்த மாணவர்களின் பெற்றோராகிய எமக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டது.

குறித்த வேலைத் திட்டத்தை பிறிதொரு பாடசாலை நிர்வாகத்தினர் செய்து விட்டு தாம் செய்ததாக கூட்டறிக்கைகளில் கையொப்பமிடும்படி பாடசாலை அதிபர் வேண்டிக்கொண்டதை தான் ஏற்றுக்கொள்ள மறுத்ததையடுத்து, இந்த முரண்பாடு ஏற்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் வலயக்கல்விப் பணிப்பாளர் அலுவலகம், மாகாண கல்விப் பணிமனை, அரசியல் பிரமுகர்கள், பள்ளிவாசல் தலைவர்கள், ஊர்ப் பிரமுகர்கள் என நாம் பலரிடமும் முறைப்பாடுகளை செய்தும் தமக்கு இதுவரை எந்தத் தீர்வும் கிட்டவில்லை. இந்நிலையில், பாடசாலைக்கு சென்றுகொண்டிருந்த எமது பிள்ளைகளின் மீது அபாண்டமான பொய்க் குற்றச்சாட்டுகளை சொல்லி அவர்களை தொடர்ச்சியாக பழிவாங்கும் செயற்பாடுகளில் பாடசாலை இடம்பெற்று வருகின்றது. எனக்கு எதிராக முறைப்பாடுகளும் வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், எமது பிள்ளைகளின் புத்தகப் பைக்குள் போதைப்பொருட்களை வைத்துவிட்டு எம்மீது குற்றம் சுமத்தலாம் என்ற உள் அச்சம், பயம் காரணமாக கடந்த 45 நாட்களாக எமது பிள்ளைகள் பாடசாலைக்கு செல்ல முடியாத நெருக்கடியான சூழல் ஏற்பட்டுள்ளது. மேலும் அவர்கள் மன உளைச்சலோடு வீட்டுக்குள்ளேயே அடைந்துள்ளனர்.

கடந்த பத்து தினங்களுக்கு முன்னர் பாதிக்கப்பட்ட மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர் என அனைவருக்கும் தனித்தனியாக மாகாண கல்விப் பணிப்பாளரின் விசாரணை சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றது.

எனினும், இதுவரை எமக்கு எதுவித தீர்வும் கிடைக்கவில்லை. குறித்த பாடசாலையின் அமைவிடத்திற்கருகில் 150 கிலோ மீற்றர் தூரத்தில் வசிக்கும் மாணவர்கள் பிறிதொரு பாடசாலைக்கு இடம்மாற்றுவதிலும் பார்க்க ஊழல் மோசடியில் சிக்குண்டு தவிக்கும் பாடசாலையின் அதிபரை குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்தி தீர்வைப் பெற்றுத் தரும் வரை வேறொரு பாடசாலைக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யுமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

எமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வை பெற்றுத்தராத பட்சத்தில் தமது பிள்ளைகளும் நாமும் கல்வி உரிமையை பெற்றுக்கொள்வதற்காக சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்திற்கு முன்னால் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தயாராக உள்ளோம் என்று இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7